உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௪.] ஈசுவரஸு ஐப்பசிமீ [பகுதி-௧௨.

Vol. 34. October—November 1937. No. 12.

உள்ளுறை.

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணு—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1937.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No 54, New Jail Road, Madura.

உ

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,

மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	யாப்பணியிலக்கணங்கள்	0	10	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
*7.	தோத்திரத்திரட்டு			
*8	தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய முதற்பாகம்.	6	0	0
*	ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
*9.	அபிதானசிந்தாமணி			
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
14.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...	1	4	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

"செந்தமிழ்" நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால், சென்ற முப்பத்துநான்குவருட காலமாகத் தமிழ்மொழியின்வளர்ச்சிகருதி மாதம் ஒருமுறை வெளியிடப்பெற்றுவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகையானது, பல பண்டிதர்களாலும் எழுதிவரப்பெறும் அரியவிஷயங்களை எளிதில் எல்லோருமுணர வெளியிடும்பெருமைவாய்ந்ததென்பது யாவரும் அறிந்ததே. அது, செந்தமிழ்நேயர்களின் அபிமானத்தையும், பண்டிதர்களின் ஆதரவையுங்கொண்டே இப்பகுதியோடு முப்பத்துநான்காந்தொகுதி முற்றுப்பெற்றிருக்கிறது. இனி, முப்பத்தைந்தாந் தொகுதி தொடங்கப்பெற்று, அதன் முதற்பகுதி நாளிது ஈசுவர௵ கார்த்திகை௴ முதற்றெய்தி வெளிவரும். அப்பகுதி வழக்கப்படி அங்கத்தினர்களுக்கும், செந்தமிழ்ச் சந்தாதார்களுக்கும் அத்தொகுதியின் வருஷச்சந்தாவுக்கு வி. பி. யில் அனுப்பப்பெறும். செந்தமிழபிமானிகள் வி. பி. யை அன்புடன் பெற்றுப் பத்திரிகையை ஆதரித்துவருவதோடு தங்கள் நண்பர்களையும் பத்திரிகையைத் தருவித்துப் படித்துவரும்படி தூண்டவும், பண்டிதர்கள் சிறந்த விஷயதானமளித்துச் செந்தமிழைச் சிறப்பித்துவரவும் வேண்டிக்கொள்ளப்பெறுகிறார்கள்.

N. B. முப்பத்தைந்தாந்தொகுதிச் சந்தாத்தொகையை மணியார்டர்மூலம் அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர், நாளிது ஈசுவர௵ ஐப்பசி௴ 25௳க்குள் இச்சங்க மாபிசிற்குக் கிடைக்கும்படி மணியார்டரை அனுப்பிவைத்தல் வேண்டும். அதற்குள் மணியார்டர் வாராவிட்டால் முப்பத்தைந்தாந்தொகுதியின் முதற்பகுதி வழக்கப்படி வி. பி. மூலம் அனுப்பப்பெறும். வி. பி. அனுப்பியபின்பு அதனை அங்கீகரிக்காது திருப்பியனுப்புவதால் சங்கத்துக்கு வீண்செலவு நேரிடுமாதலால் தயவுசெய்து வி. பி. யை அங்கீகரித்துச் செந்தமிழை ஆதரித்துவருமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

லக்ஷ்மீநாராயணையர்,

மானேஜர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௪.] ஈசுவரஹு ஐப்பசிமீ [பகுதி-௧௨.

Vol. 34. October—November 1937. No. 12.

கம்பராமாயணசாரம்.

[௩௪௪-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

விபீடணன் அடைக்கலப்படலம்.

விபீடணன் இராமனை அடைக்கலம் அடைந்ததைக் கூறுவது.

விபீடணன் இராவணனால் துரத்துண்டு
இராமனிருந்த இடத்தை அடைதல்.

[இரணியன்வரலாற்றை விபீடணன்கூறக் கேட்ட இராவணன், கோபங்கொண்டு, 'இரணியனது பகைவனுக்கு அன்பு பூண்ட இரணியன்மகனாகிய பிரகலாதனும் என் பகைவனுக்கு அன்புபூண்ட என் தம்பியாகிய நீயும் ஒருவனையொருவன் ஒத்திருக்கின்றீர்கள். உங்களுக்கு வேறெவரும் ஒப்பாகார். பிரகலாதன் பிதாவைக் கொலையுணச்செய்து இராச்சியத்தை அடைந்தது போல நீ அண்ணனைச் சாகச்செய்து அரசாளக்கருதுகிறாய். உன் கருத்து நிறைவேறாது. எனக்குத் தன்னமையான பகை நீயிருக்க, அன்னியமான பகை வேறு வேண்டுமோ! முன் நான் அநுமானைக் கொல்லுங்களென்றபோது நில்லுங்களென்று தடுத்து மாதரைக்கொல்லினும் தூதரைக்கொல்லுதல் தகாதென்று

சொல்லி அவனைத் தப்புவித்தாய். அப்போதே நீ பகைவனைத் துணையாகக்கொள்ளத்துணிந்தாயென்பதை இப்போது தெரிந்தேன். வஞ்சத்தையுட்கொண்ட நெஞ்சத்தையுடைய உன்னோடு வாழ்தலினும் நஞ்சத்தையுட்கொண்ட நாகத்தோடு வாழ்தல் நல்லது. உடன்பிறந்தானைக் கொன்றானென்ற பழியுண்டாமென்று உன்னைக் கொல்லாதுவிட்டேன். ஓடியொழிந்துபோ. இனி என் கண்முன் நின்றால், இறந்திடுவாய்' என்றான். எனவே, விபீடணன் தன் அமைச்சர் நால்வரோடு விண்ணிற் கிளம்பிநின்று, 'கீழோர் சொல்லைக் கேட்டுக் கெட்டுப்போகாதே. தருமநெறி தவறினார் சாவது சத்தியம். யானறிந்தவரை, உனக்கு நன்மையை உரைத்தேன். என் பிழையைப் பொறுத்தருள்' என்று கூறி, இலங்கையைவிட்டுப்புறப்பட்டு, வானரசேனையுடன் இராமன் கடற்கரைக்கு வந்திருப்பது தெரிந்து, அங்கே சென்று, எங்கெங்கும் செந்தாமரை பூத்த வெண்பாற்கடல்போல அங்கங்கு தீபங்கள் விளங்கிய வெண்ணிற வானரசேனாசமுத்திரத்தைக் கண்டான். கண்டவன், 'அதருமனான அண்ணனால் துரத்துண்டேன். தருமனான தாசரதிபால் அன்புகொண்டேன். இப்போது யான் செய்யத்தக்கது யாது? சொல்லுங்கள்' என அமைச்சரைக் கேட்க, அவர்கள் 'இனி இராமனைச் சேர்வதே ஏற்றது' என, அவன் 'நல்லதே சொல்லினீர். ஆதிபகவனுக்கு அன்புடைமையும் நீதிநெறியினின்று நீங்காமையும் உயிர்களுக்கு இரக்கமுடைமையும் நான் பிரமனை நோற்றுப் பெற்ற வரங்கள். அவ்வரங்களின்பலன் கைகூடுங்காலம் வந்தது. இராமன்பாதம் பணிந்து நமதெண்ணம் நிறைவேறப்பெறுவேமாக' என்று கூறினான். பின்பு, அவர்கள், இராத்திரியில் இராமனைக் காண்பது ஏற்றதன்றென எண்ணி, இராப்பொழுதை மாம நெருங்கி இருள் நிறைந்த ஒருசோலையில் மறைவாயிருந்து போக்கினார்கள்.

இராமன் கடற்கரைக்காட்சியைக் கண்டு களித்தல்.

விடியற்காலமானபோது, இராமன் கடற்கரையை அடைந்து, தான் நின்ற இக்கரையிலிருந்து சிதையுள்ள அக்கரையை அடையும் வகையை ஆராயப்புகுந்தான். அவன் அந்த நினைவை மறக்கும்படி அழகுநிறைந்துவிளங்கிய கடற்கரையையும் உப்பங்கழி

களையும் பலவகைப்பட்ட மலர்களையும் அன்னத்தொகுதிகளையும் புன்னைப்பொழில்களையும் மணற்பரப்பையும் அலைப்பெருக்கையும் கண்டு களிப்புறலானான். அக்காட்சிகளைச் சீதையும் உடனிருந்து காணுதற்கில்லையேயென்று அவள்பிரிவைநினைந்து பெரிதும் வருந்தியிருந்தான். அப்போது, சுக்கிரீவாதியர் வந்து ஆறுதல்கூறி அவனிருப்பிடத்துக்கு அழைத்துச்சென்றனர்.

விபீடணன் வானரசேனைப்பக்கம் வரல்.

விடிந்தவுடன் விபீடணன் மந்திரிகளுடன் வானரப்படைப் பக்கம் வந்தான். வரும்போது 'சயசீலனே! சரணம்! தாசரதீ! சரணம்!' என்று கூறிய வார்த்தைகள் காதில்விழ, இராமன் பக்கத்திருந்தாரைப்பார்த்து 'இவ்வாறு கூறுவார் யாவரோ?' என்றான்.

மயிந்தன் விபீடணன் வந்த காரணத்தை விசாரித்தறிந்து இராமனுக்குத் தெரிவித்தல்.

அச்சமயத்தில், வானரர் சிலர், 'அரக்கர்கள் நம் படையை அடைந்தார்கள்; அடியுங்கள்; பிடியுங்கள்' என்றும், வேறு சிலர், 'இவர்களைப் பிடித்துச் சிறைப்படுத்திவைத்துக்கொண்டு இராமபிரானிடம் தெரிவிப்போம்' என்றும், மற்றும் சிலர், 'நாம் தாமதஞ் செய்தால், இவர்கள் இராக்கதராதலால் விண்ணிற் பறந்து மறைந்துவிடுவார்கள். உடனே கொன்றிடுங்கள்' என்றும் கூறிக் கொண்டிருக்கும்போது, அனுமான் ஏவலால், மயிந்தன் துமிந்தன் என்னும் சகோதரர்கள், அங்கு வந்து, அவ்வானரர்களை விலக்கி, விபீடணாதியரை நோக்கி 'நீவிர் யாவிர்? வந்தகாரியம் யாது?' என வினவ, விபீடணனுடைய முதன்மந்திரி அனலன், 'இவன் (விபீடணன்) தருமசிந்தையும் சாந்தசீலமும் உடையவன்; பிரமதேவனுக்குப் பேரன்மகன்; இராமபிரானைச் சரணமடைய வந்திருக்கின்றான்' என்றான். மயிந்தன் 'நீ கூறியதை இராமபிரானுக்குத் தெரிவிப்பேன்' என்று கூறித் தன்னுடன்வந்த தம்பி துமிந்தனையும்

வானரத்தலைவரையும் 'இவர்களைச் சாக்கிரதையாகக் காத்திருங்கள்' என்று கூறி இராமனிடம் சென்றான்.

சென்றவன், தருமமும் தவமும் ஞானமும் சுவர்களாகப் பெருமையும் பொறுமையும் வாசல்களாக அமைந்த கருணையாகிய கோயிலில் கடவுளாக விளங்கிய இராமனை அடைதற்கு ஆணை பெற்று அடைந்து அடிவணங்கித் தான் போய்க் கண்டதும் கேட்டதும் தெரிவித்தான்.

இராமன் விபீடணனைச் சேர்க்கலாமோ? நீக்கலாமோ? என அருகிருந்தாரை வினவுதல்.

இராமன், அருகேயிருந்தோரை 'இந்த விபீடணன், கொள்ளற்பாலனோ? தள்ளற்பாலனோ? கூறுங்கள்' எனச் சுக்கிரீவன் சொல்லுகின்றான்.

சுக்கிரீவன் சொல்லுதல்.

'எல்லாம் அறிந்த நீ, எங்களைக் கேட்டகாரணம் யாதோ? அறியேன். உனக்கு யாங்கள் தெரிவிக்கவேண்டிய தொன்றுமில்லை. ஆயினும், வினவிய வினாவுக்கு விடையளிக்கவேண்டுமென்பது கொண்டு விளம்புகின்றேன். இவனுக்கும் இவன் தமையனுக்கும் சண்டைநிகழவில்லை. அப்படியிருக்க, இவன் அவனைக் கைவிட்டது தவறு. தீயரேயான இராக்கதருள்ளே சீரியோர் யாவரேயிருக்கின்றார்? தாய் தந்தை தமையன் குரு அரசன் என்னும் ஐங்குரவருள் எவரைப் பகைத்தவரும் ஏற்றுக்கொள்ளற்பாலரல்லர், நீக்கித் தள்ளற்பாலரே. சமாதானகாலத்தில் தமையனுடனிருந்து அரசச்செல்வங்களனைத்தையும் அனுபவித்துவிட்டுச் சண்டைவந்தவுடன் சாவுக்கஞ்சித் தமையனைக் கைவிடுபவன், ஆண்மையுடையவனாவனோ? தமையன் தவறானவழியிற் செல்வானைத் தடுக்கமுடியவில்லையானால், அவனை நீங்கிச் சந்நியாசியாகாமல் பகைவனோடு சேர்தல் பழிப்பானதன்றோ? தன்மருமகனான இராவணன் தீவழியிற் செல்வானாக, அவனைத் திருத்தமுயன்ற முயற்சி பயன்தராமற்போனபோது, மாமனான மாரீசன், தான் செய்துகொண்டிருந்த தவத்தைக் கைவிட்டானேயன்றி, மருமகனைக் கைவிட்டானோ?

அண்ணனுக் காகாதவன் ஆருக்காவான்? இவன், நம்மை வஞ்சனையால் மாள்விக்கவந்தானேயன்றி, வாழ்விக்கவரவில்லை' என்றான்.

சாம்பவான் சாற்றுதல்.

சாம்பவான், 'அறிவுடையோராயிருப்போரும், பகைவரைச் சேர்த்துக்கொள்வாரானால், அழிந்திடுவார். வேதவேள்விகளை விலக்கி வேதியராயுள்ளார்க்குத் தீதினையே செய்யும் தீய இராட்சசர் நம்மைச்சேர்வாரானால், நமக்கு நாசஞ்செய்வாரேயன்றி நன்மை செய்யார். பகைப்புலத்தானைப் பாதுகாப்பதாக வாக்களித்து ஏற்றுக்கொண்டபின் அவன் வஞ்சனைசெய்தாலும், அவனை அகற்றுதல் பழிக்கிடமாம்; அன்றி, அறக்கடவுள் கோபத்துக்குக் காரணமுமாம். இவன் சரணாகதனாக வந்தது, மாரீசன் மானாகவந்தது போலும்' என்றான்.

நீலன் நிகழ்த்துதல்.

சேனாபதியாகிய நீலன், 'நம்மை அடைபவர் பகைவரைச்சேர்ந்தவராயிருந்தாலும், அவர், தம் சுற்றத்தாரைக்கொன்ற பகைவரை எதிர்க்கவலியின்றி எளிமைப்பட்டுவந்தவராகவாவது, தமக்குரிய மாதரைக் கெடுத்ததுகாரணமாக வயிரங்கொண்டமனத்தினராகவாவது, பெரும்பொருள் இழக்கச்செய்யப்பட்டதனால் கோபங்கொண்டவராகவாவது, வேறு தக்க காரணமுடையராகவாவ திருந்தால், சேர்த்துக்கொள்ளுதற் குரியராவர். இவன், அத்தகையோருள் ஒருவனல்லன். ஆதலால், இவனை ஏற்றுக்கொள்ளலாகாது' என்றான்.

மற்றவர் ஒத்துச்சொல்லுதல்.

மற்றவர்களும் விபீடணனைச் சேர்க்கலாகாதென்றே கூறினர்.

இராமன் அனுமானை வினவுதல்.

இராமன், அனுமானைநோக்கி, 'உன்கருத்து யாதோ? உரை' யென்றான். அவன் தலைவணங்கி, வாய்பொத்தித் தாழ்மையொடு சாற்றுகின்றான்.

அநுமான் கூறுதல்.

'ஆராய்ச்சிவல்லார் அனைவரும் ஒருபடிப்பட ஒருமுகமாக விபீடணனை விலக்கவேண்டுமென்றனர். ஆயினும், அடியேனுக்கு இவன் தீயனென்ற சந்தேகம் சிறிதுமில்லை. வஞ்சகர், தம் வஞ்சகத்தை மறைக்கமுடியாது.

"உள்ளத்தின் உள்ளதை உரையின் முந்துற மெள்ளத் தம் முகங்களே காட்டும்;"* ஆதலால், இவன் கள்ளமில்லாதவனென்பதைத் தெரியலானேன். வாலி விண்ணுளவும் அவன் தம்பி மண்ணுளவும் செய்த வில்லாண்மையையறிந்து, உன்னால் தன் தமையன் அரசாட்சியைத் தான் அடையலாமென்ற ஆசையுடன் வந்திருக்கிறான். பாம்பின்கால் பாம்பறியுமென்றபடி அரக்கர்மாயத்தை அரக்கரறிவாராதலால், அவர்களுள்ளே சிறந்த ஓர் அரக்கன் நம்மை அடைந்தது நன்மையேயாம். இராவணன் என்னைக்கொல்ல எத்தனித்தபோது, இவன், தூதரைக் கொல்லலாகாதென்று சொல்லித் தடுத்தான். அடியேன், இலங்கையிலே இரவிலே சீதாதேவியைக் காணத் தேடித்திரிந்தபோது, ஏனைய எல்லா இராக்கதர் இல்லங்கள்போலன்றி இவன் மாளிகை, கள்ளும் மாமிசமும் காணப்படாததாய்ப் பூசுரர்வீடுகள்போலப் பூசைக்குரிய பொருள்கள் பொலிந்ததாயிருக்கக் கண்டேன். இவனைச் சேர்ந்தோரும் சீரியரென்பதைத் தெரிந்தேன். இவன்மகள் திரிசடையென்பாள் சிறையிலிருந்து வருந்தும் சீதாபிராட்டிக்குத் தேறுதல்வார்த்தைகள்கூறித் துன்பம் மாற்றும் தோழியாயிருக்கிறாள்.

14 பெற்றுடைய பெருவரமும் பிறந்துடைய வஞ்சனையும்
பிறவு முன்கை
விற்றேடையின் விடுகணையால் வெந்தொழியு'மெனக்கருதி
விரைவின் வந்தான்²

---

* இப்படலம் ௧௧-ஆம் பாட்டு.

உற்றுடைய பெருவரமு[3] முகந்துடைய தண்ணளியு[4]
முணர்வு[5] நோக்கின்
மற்றுடையர் தாமுளரோ வாளரக்க[6] னன்றியே
தவத்தின் வாய்த்தார்.[7]

கொண்டுகூட்டு: நோக்கின், (இந்த) வாள் அரக்கனன்றி (இவன்) உற்றுடைய பெருவரமும் உகந்து உடைய தண் அளியும் உணர்வும் தவத்தின் வாய்த்தார் மற்றுடையார் தாமுளரோ? (இல்லை). (இவன், தமையன் இராவணன்) பெற்று உடைய பெரு வரமும் பிறந்து உடைய வஞ்சனையும் பிறவும் உன்கை வில்தொடையின் விடுகணையால் வெந்து ஒழியும் எனக் கருதி விரைவின் வந்தான்.

பொருள்: ஆராய்ந்துபார்த்தால், (இந்த) வாள் (ஏந்திய) இராக்கத (னை விபீடண) னன்றி, (இவன்) அடைந்திருக்கின்ற பெருவரத்தையும் மனமுவந்து கைக்கொண்டிருக்கிற கருணையையும் (இயற்கையினாலும் முயற்சியினாலும் பெற்றிருக்கின்ற) அறிவையும் தவத்தினால் வாய்க்கப்பெற்றுடையார் வேறுளரோ? (இல்லை). (இவன், தமையன் இராவணன் தவஞ்செய்து) பெற்று உடைமையாகக்கொண்டுள்ள பெருவரங்களும் (அவன் பிறக்கும் போது கூடப்) பிறந்து (அவனை நீங்காத) உடைமையாயிருக்கின்ற வஞ்சனையும் (சங்கரனிடம் பெற்ற சந்திரவாள்போன்ற) வேறு பேறுகளும் (ஆகியவை யெல்லாம்) உன் கையில்வில் நாணினின்று விடப்படுகின்ற அம்புகளால் வெந்தொழிந்துவிடுமென்றெண்ணி விரைந்து (உன்னை அடைய) வந்தான்.

தொடை - கயிறு (தமிழகராதி)—வில் நாண். கணை - அம்பு. அளி - கிருபை. வாய்த்தார் - வாய்க்கப்பெற்றார்.

விபீடணன் இதுவரையும் தனக்குப் பற்றுக்கோடாயிருந்த இராவணன் இராமனால் இறந்துவிடுவானென்றும் இனிஇராமனே புகலென்றும் வந்தான்,

இவனைப்போல வரபலமுடைய ஏனைய இராக்கதர்போலன்றி, இவன், இரக்கமுடையவனுமிருக்கின்றான்: ஆதலால் ஏற்றுக்கொள்ளத்தக்கவனென்பதாம்.

பாடபேதம்: [1] அழியும். [2] மேவினுனல்,மேற்சொல்லோடும்,மேற்கோளோடும். [3] மனவலியும். [4] பிறந்துடைய பெருந்தவமும், பிறந்துடைய வஞ்சனையும். [5] பிறவும், உணர்ந்து. [6] வாளரக்கர். [7] மிக்கார்.

ஒரு பிரதியில் முன்னிரண்டடிகள் பின்னிரண்டடிகளாயுள்ளன. ‘பெற்றுடைய பெருவரமும் பிறந்துடைய பெருந்தவமும் பிறவும் நோக்கின்’ என்று சில பிரதியிலும் ‘பெற்றுடைய மனவலியும் மூக்கமிகு பெருந்தொழிலு முணர்ந்து நோக்கின்’ என்று சில பிரதியிலும் மூன்றுமடி காணப்படுகின்றது*.

15 தேவர்க்குந் தானவர்க்குந் திசைமுகனே[1] முதலாய தேவ தேவர்[2]
மூவர்க்கு முடிப்பரிய[3] காரியத்தை முற்றுவிப்பான்[4] மூண்டு நின்றாய்[5]
ஆவத்தின் வந்தபய மென்றானை யயிர்த்தகல விடுதி யாயிற்[6]
கூவத்தின் சிறுபுனலைக் கடலயிர்த்த[7]தோவ்வாதோ கோற்றவேந்தே.

கொண்டுகூட்டு: ‘கொற்றவேந்தே! தேவர்க்கும் தானவர்க்கும் திசைமுகன் முதலாய தேவதேவர் மூவர்க்கும் முடிப்பரிய காரியத்தை முற்றுவிப்பான் மூண்டுநின்றாய். ஆவத்தின் வந்து “அபயம்” என்றானை அயிர்த்து அகலவிடுதியாயின், (அது) கூவத்தின் சிறுபுனலைக் கடல் (நீர்) அயிர்த்தது ஒவ்வாதோ?’

பொருள்: வெற்றியுடைய வேந்தனே! தேவர்களாலும், அசுரர்களாலும், பிரமதேவன்முதலான, தேவர்களுக்குத் தேவரான மூவர்களாலும் முடிக்கமுடியாத (இராவணாதி இராட்சசசங்காரமான) காரியத்தை முடிக்கும்படி முனைந்துநின்றாய். (அப்படிப்பட்ட †அகடிதகடனாசாமர்த்தியமுடைய நீ) ஆபத்துக்காலத்தில்

* இங்கே காட்டிய பாடபேதங்களும் இதற்கு முன்னும் பின்னும் வரும் பாடபேதங்களும் ஸ்ரீ. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர்பதிப்பிலுள்ளவை.

† அகடிதகடனாசாமர்த்தியம் – கூடாததைக் கூட்டுவிக்குந்திறமை.

(உன்பால் அடைக்கலமாக வந்து) "அபயம்" என்றவனை (இவனைச் சேர்த்துக்கொண்டால் நமக்கு என்னகேடுவருமோவென்று) சந்தேகித்து (ச் சேர்த்துக்கொள்ளாது) நீங்கவிடுவாயானால், அது, ஒரு கிணற்றிலுள்ள (மிகவும்) சிற்றளவினதாகிய (நீர், தன்னைச் சேர்ந்தால், தன்னைக் கெடுத்துவிடுமென்று அந்தக் கிணற்று) நீரை (மிகவும் பேரளவினதாகிய) சமுத்திரசலம் சந்தேகிப்பதுபோலும்.

தானவர் - அசுரர். திசைமுகன் - பிரமதேவன். திசைமுகனேயென்பதில், ஏ உயர்வுசிறப்பு. முற்றுவிப்பான் - முடிக்கும்படி. கோபம் கோவம், பாபம் பாவம் என வருதல்போல, ஆபத்து, ஆவத்து என வந்தது. அபயம் - அடைக்கலம் - 'பயமில்லாதபடி காக்கவேண்டிய பொருள்.' அயிர்த்தல் - ஐயுறல் - சந்தேகித்தல். கூவம் - கிணறு. 'அயிர்த்தால் அஃது ஒவ்வாதோ' எனற்பாலது 'அயிர்த்ததொவ்வாதோ' எனச் சுருக்கிக் கூறப்பட்டது. ஒவ்வுதல் - ஒத்திருத்தல்.

பாடபேதம்: [1] திசைமுகற்கும். [2] தேவர்தேவர், தேவதேவே. [3] முற்றுத. [4] முற்றுவிப்பாய். [5] நின்றே. [6] விடுதுமென்றால், விடுதியென்றால். [7] அயிர்த்தால்.

16 பகைப்புலத்தோர் துணையல்ல ரேன்றி[1]வனைப்[2] பற்றுமே
லறிஞர் பார்க்கின்
நகைப்புலத்த தாமன்றே[3] நற்றுய முளதாய[4]
பற்றுன் மிக்க[5]
தகைப்புலத்த தந்தையர்க டம்பியர்க டமையரிவர்[6]
தாமே யன்றே[7]
மிகைப்புலத்து[8] விளைகின்ற தோரு[9]பொருளைக் காதலிக்கின்
விளிஞ ராவார்.

பொருள்: பகைவனிடத்தைச் சேர்ந்தவர் துணையாகா(ர், பகையே ஆவா)ரென்று கருதி இவ்விபீடணனைச் சேர்க்காதுவிட்டோமானல், (அதனை அரசியல்) அறிவாளர் அறிவாரானல்,

(அது,) அவர்களாற் பரிகசித்தற்கிடமானதாமன்றோ? (தமக்குள்ளே) தாயாதிப் பாந்தவியம் இருப்பதால் உண்டாகிய அன்புடைமையால் மிகுந்த (உறவின்முறைத்) தகுதிக்கு இருப்பிடமானவராகிய தந்தையர் தமையர் தம்பியரென்ற இவர்களேயல்லவா, (தங்களுக்குரிய சிறந்ததான (தாய) பூமியில் விளைந்ததொரு பொருளை (ஒருவரன்றி அதிகமானவர்) விரும்புவாராஞல் (அவர்கள் அப்பொருள் காரணமாக ஒருவரையொருவர்) கோபிப்பாராவார்? (அவர்களுள் ஒருவர் அவர்களுடைய எதிரியை அடைதல் வஞ்சிப்பதற்காகவல்லாமல் உதவிபெறுதற்காகவாமென்பது தெளிவாமென்றபடி.)

புலம் - இடம். புலத்தது - இடத்தினது - இடத்திலுள்ளது. பற்றுதல் - ஏற்றுக்கொள்ளல். நகை - சிரிப்பு; பரிகாசம். தாயம் - தந்தைவழிச் சுற்றம் - பங்காளி உறவின்முறை. உளது ஆய - உள்ளதால் ஆகிய; மூன்றன்தொகை. தகை - தகுதி. மிகை - சிறப்பு. விளிதல் - கோபித்தல். அறிவார் அறிஞரென வரல்போல, விளிவார் விளிஞரென வந்தது.

இப்பாட்டில்வரும் நான்கு எதுகைகளும் இப்படலம் 65-ம் பாட்டிலும் வந்திருத்தல் காண்க.

பாடபேதம்: [1] துணையல்லவென்று. [2] இவரை. [3] புலத்தாரென்றென்றே. [4] முதலாய, உளதாக, உளதாகிற். [5] பற்ருர்வாரார். [6] புலத்த தந்தையர்க டம்பியர்க டமையரிவர். (திருநெல்வேலிக் கவிராயரவர்கள் ஏடு), புலத்த தந்தைதாய் தம்பியர்கள் தனையரிவர், புலத்தர் தங்குலத்தர் தம்பியர்க டனையரிவர். [7] அன்றே. [8] மிகப்புலத்தின். [9] விளைகின்ற மெய்ப்.

17 ஆதலா லிவன்வரவு நல்வரவே யென[1]வுணர்ந்தே[2]
னடியே னுன்றன்[3]
வேதநா லெனத்தகைய திருவுளத்தின்[4] குறிப்பறியே
னென்று விட்டான்.
காதனுன் முகனுலுங் கணிப்பரிய[5] கலையனைத்துங்
கதிரோன் முன்சென்
றோதினு னேதரிர் கடந்துபகை கடிந்து[6]லகை
யுய்யச் செய்தான்.[7]

கொண்டுகூட்டு: காதல் நான்முகனுலும் கணிப்பரிய கலை அனைத்தும் கதிரோன் முன்சென்று ஓதினன் ஓதநீர் கடந்து பகைகடிந்து உலகை உய்யச்செய்தான், 'ஆதலால் (-மேற் கூறியதனல்) இவன் வரவு நல்வரவே யென அடியேன் உணர்ந்தேன். வேதநூலெனத்தகைய உன்றன் திருவுளத்தின்குறிப்பை அறியேன்' என்று விட்டான்.

பொருள்: (சாஸ்திரங்களில்) ஆசையுடைய பிரமதேவனுலும் மதிப்பிடமுடியாத (அந்தச்) சாஸ்திரங்களெல்லாவற்றையும் சூரியனெதிரே (முதுகுகாட்டாது முகங்காட்டிக்கொண்டு அவன் தேர் போகும் வேகத்துடன், பின்னேக்கிச்) சென்றவண்ணம் அப்பியசித்தவனும் கடலைக் கடந்து (இலங்கையை அடைந்து இராட்சசப்) பகைவரை வென்று (உலகுக்கு உயிரான இராமனுக்கு அவனுக்குயிரான சீதையின் சேமத்தைத் தெரிவித்து அவள் பிரிவாற் சாக இருந்த அவனை உயிரோடிருக்கச்செய்து,) அதனுல் உலகத்தாரை உய்யச்செய்தவனுமான அனுமான், 'மேற்கூறிய காரணங்களினுல் இவன்வரவு நல்வரவேயென்று அடியேன் தெரியலானேன். (உள்ளதை உள்ளபடி தெரிவிக்கும்) வேதநூலென்றுசொல்லத் தக்க உனது திருவுள்ளத்தின்நோக்கம் யாதோ? அறியேன்' என்று சொன்னுன்.

குறிப்பு - நோக்கம். விடுதல் - சொல்லுதல் (தமிழகராதி). 'விட்டான்' என்பதைப்பற்றிய விசேடவுரையைக் கம்பராமாயணசாரம் கிட்கிந்தா காண்டம் 90-ம் பாட்டின் உரையிற் காண்க. காதல் - ஆசை. கணித்தல் - கணக்கிடுதல், மதிப்பிடுதல். கலை - சாஸ்திரம். ஓதம் - வெள்ளம்; கடல். நீர் - கடல். ஓதநீர் - வெள்ளநீராகிய கடல்; கடல் (என்பது குறிக்கும் மீமிசைச்சொல்). கடிதல் - ஓட்டுதல்; அழித்தல். உய்தல் - சீவித்தல்.

'காதல்' என்பதைக் 'காதலால்' என்று பொருள்பட மூன்றும் வேற்றுமைத்தொகையாகக்கொண்டு, 'நான்முகனுலும் கணிப்பரிய கலை அனைத்தும் (கற்கவேண்டுமென்ற) காத(லா)ல்' என்று அன்வயித்துப் பொருள்கொள்ளலாம்.

பாடபேதம்: [1] என்று. [2] அமிர்த்தேன். [3] அடியனேனுன். [4] திருமனத்தில். [5] அளப்பரிய. [6] கடந்து. [7] கொண்டான்.

[இராமன், அனுமான் வழங்கிய* பொருட்சுவை பொருந்திய வசனமிர்தத்தைச் செவிவாயாற் பருகி மகிழ்வுற்றுப் பக்கத்துள்ளாரைப் பார்த்துப் பகர்வானனன்.]

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

உ

பிழைதிருத்தம்.

தொகுதி	பகுதி	பக்கம்	வரி	பிழை	திருத்தம்
ருச	கக	ருருகூ	க0	அடுதல்	அடுத்தல்
,,	,,	ருசக	கஎ	நெருப்பில்லாத	நெருப்பல்லாத
,,	,,	ருசச	உ	அகந்தை	அகந்தை'

வெ. ப. சு.

---

* வழங்கிய - சொல்லிய; கொடுத்த.

பாஞ்சராத்திரம்.

[ந-கூo-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

வேலையாள்:—அஶ்ரத்தேயம் ப்ரியம் ப்ராப்தம்
ஸௌபத்ரோ க்ரஹணம்கத:॥

நம்பமுடியாததும் விரும்பத்தக்கதுமான செய்தியொன்று கிடைத்திருக்கிறது, சுபத்திரையின்புதல்வன் பிடிபட்டிருக்கிறான்.

பிருகந்நளை:—எப்படிப் பிடிபட்டான்? (தனக்குள்)

தாவி தபலதிஷம் யோத்ய ஸைந்யம்
பரிமணிதம் ப ரணெZத்ஸெ ஸத்ருஷ:।
ஸத்ரஶ ஜஹதா தெந நாஸ்தி கஶ்சிஞ
கஜஹ ஹவெந்திஹதெ தஷா கீசகேஷு॥

இந்தப்படையிலுள்ள வலிமிக்கவர்களை நான் பரீக்ஷித்துப் பார்த்தேன்; இங்கே அவனுக்கு (அபிமன்யுவுக்கு)ச் சமமானவீரன் ஒருவனுமே இல்லையே; (ஆயிரம் யானைகளின் வலிமைகொண்ட) கீசகர்களும் மாண்டார்களே; யார் அவனைப் பிடித்திருப்பார்கள்?

பகவான்:—பிருகந்நளே! இது என்ன?

பிருகந்நளை:—ந ஜாநெ தஸ்ய ஜெதாரம்
பலவாந் ஶிக்ஷிதஶ்ச ஸ:।
பித்ரூணாம் ஹாஸ்யதொஷெண
ப்ராப்நுயாதபி யஷணம்॥

அவனை வென்றவன் இன்னானென்று தெரியவில்லை; அவன் வலியோன்; போர்செய்வதில் நன்றாகப்பழக்கப்பெற்றவன்; தந்தையர்களின் நல்வினைக்குறைவால் ஒருகால் அவன் தோல்வியடைந்திருக்கக்கூடும்.

அரசன்:—அவன் எப்படிப் பிடிக்கப்பட்டான்?

வேலையாள்:—ரதமாஸாய நிஶ்ஶங்கம் பாஹுப்யாமவதாரித:।

யாரோ ஒருவனல் தைர்யத்துடன் தேரில் ஏறிக் கைகளாலே யே கீழே இறக்கிவிடப்பட்டான்.

அரசன்:—எவனல்?

வேலையாள்:—𑌯𑌃 𑌕𑌿𑌲𑍈𑌷 𑌨𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌣 𑌵𑌿𑌨𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌮𑌹𑌾𑌨𑌸𑍇 ॥

சமையலிடத்தில் மகாராஜாவினல் எவன் நியமிக்கப்பட்டிருக் கிருனே அவனலே.

அரசன்:—ஆதலால், மரியாதையுடன் அபிமன்யுவை இங்கே அழைத்துவா.

பகவான்:—ஓ! அரசரே! விருஷ்ணிகுலத்துக்கும் பாண்டவ குலத்துக்கும் விளக்காகிற அபிமன்யுவை மரியாதைசெய்தல், அச்சத்தால் என்று மக்கள் நினைக்கக்கூடும்; ஆதலால் அவனுக்கு ஆதரவுசெய்யாமலிருப்பதே நலம் என்று தோன்றுகிறது.

அரசன்:—யாதவகுலத்தில் பிறந்தவளான சுபத்திரையின் சிறு வனை ஆதரியாமல் இருக்கக்கூடாது. ஏனெனில்,

𑌪𑍌𑌤𑍍𑌰𑍋 𑌹𑍍𑌯𑍇𑌷 𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌸𑍍𑌯 𑌤𑌨𑌯
    𑌸𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑌂 𑌹𑌿 𑌨𑌸𑍍𑌸𑍂𑌨𑍁𑌨𑌾
𑌸𑌂𑌬𑌂𑌧𑍋 𑌦𑍍𑌰𑍁𑌪𑌦𑍇𑌨 𑌨𑌃 𑌕𑍁𑌲𑌾𑌗𑌤𑌾
    𑌨𑌪𑍍𑌤𑌾 𑌹𑌿 𑌤𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌭𑌵𑍇𑌤𑍍।
𑌜𑌾𑌮𑌾𑌤𑌾 𑌤𑍍𑌵𑌦𑌧𑍀𑌨𑌤𑌾𑌪𑌿 𑌚 𑌭𑌵𑍇𑌤𑍍
    𑌕𑌨𑍍𑌯𑌾𑌪𑌿𑌤𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌨𑌃
𑌪𑍍𑌰𑍀𑌤𑍍𑌯𑌾 𑌹𑍍𑌯𑌪𑍍𑌯𑌤𑌿𑌥𑌿𑌭𑍂𑌤𑌾𑌸𑍍𑌸𑍍𑌵𑌯𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍
    𑌶𑌿𑌷𑍍𑌟𑌾 𑌹𑌿 𑌨𑌃 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌃 ॥

இவன் யுதிஷ்டிருடைய புத்திரன்; நமது குமாரனுக்குச் சமமான வயதுள்ளவன்; வழிவழியாக நமக்குத் துருபதவாச னுடன் கூட்டுறவுண்டு; ஆகையால் நமக்கும் அவன் பேரனுக (தௌகித்திரனுக) வேண்டும்; நமக்கோ கன்னிகை இருக்கிறுள். கூடிய சீக்கிரத்தில், அவன் நமக்கு மாப்பிள்ளையானுலும் ஆகலாம்; இவன் நம்மால் கூடுமானவரையில் போற்றத்தகுந்த விருந்தினனு மாகிறுன்; பாண்டவர்கள் நமக்கு நண்பர்களல்லரோ?

பகவான்:—இது இப்படியே, ஆக்ஷேபணைசெய்து சமாதானம் ஆகவேண்டும்.

அரசன்:—யாரைக்கொண்டு அழைத்துவரவேண்டும்?

பகவான்:—பிருகந்நளையைக்கொண்டு.

அரசன்:—பிருகந்நளா! நீ போய் அழைத்துவா.

பிருகந்நளை:—மகாராஜாவின் கட்டளைப்படி. (தனக்குள்) வெகு நாளாக (என்னால்) விரும்பப்பட்டதான உத்தரவு, இப்பொழுது எனக்குக் கிடைத்திருக்கிறது. (செல்லுதல்)

பகவான்:—(தனக்குள்)

சுதேஷ்டாநீம் யாது ஸந்துஷ்டிநம் வா
ஸம்ஸ்ருஷ்டி ரூஷா மாஸரோஷம் ஷ்வா।
ஸ்லோஹம் தாவத் யாது ஸ்வாஷதாம் வா
ஸுவஸ்த்யுக்ஷம் ஷஜ்ஜதே ஹெஷ்யவாந்து॥

(அர்ஜுனன்) இப்பொழுது புத்திரனைப்பார்த்துக் களிக்கட்டும்; ஒருவருமில்லாத இடத்தில் இறுகத் தழுவிக்கொள்ளட்டும்; ஆநந்தக்கண்ணீர்விடட்டும்; என்முன்னிலையில் அவ்வாறுசெய்வதற்கு வெட்கமடைவான்.

அரசன்:—

நூவா வீஷ்மாதயோஹ்ஸா: ஸௌஸத்ராஹ் ஹணம் ஷத:।
உத்தரெணாத்யஸம்க்ஷேவாதயம் தஃப்ருயிவீஜிதா॥

தாங்கள் என்குமாரனுடையதிறத்தைக் கூர்ந்துநோக்கவேண்டும். பீஷ்மர் முதலான அரசர்கள் தோல்வியடையுமாறுசெய்யப்பட்டார்கள்; சுபத்திரையின்புதல்வன் பிடிபட்டான்; சுருங்கச்சொல்லில், உத்தரனால் இப்பொழுது பூமிமுழுமையுமே வென்றிகொள்ளப்பெற்றது.

பீமசேனன்:—(அரங்கத்தில் நுழைந்து)

ஸூதீவிதெ ஜதாஷ்யஹெ ஸூஸாஜாவஸத்தா
ஹஹராதாஸ்ய ஜநநீ வ ஹயொவநீதா:।

ஸௌஹ்ராத்ருவேகேவ தாயஸ்மயாத்த பாஹும்
தம் ச ஶ்ரமம் ப்ராப்தஸ்ய ஸமம் ஹி மந்யே ॥

(துரியோதனனால் கட்டிவைக்கப்பட்ட) அரக்குமாளிகை அக்கினியால் எரிக்கப்பட்டபோது, என்னுடைய உடன்பிறந்தார்களையும் அன்னையையும் என்னுடைய கைகளின் வலிமையாலேயே (தீயிலிருந்து) வெளியேற்றினேன்; அப்பொழுது எனக்கு உண்டான வருத்தமும், இப்பொழுது சிறுவனான அபிமன்யுவைத் தேரிலிருந்து கீழே இறக்கியதால் உண்டான வருத்தமும் சமமாகவே உள்ளன. குமாரன் இங்கே இங்கே.

(அபிமன்யுவும் பிருகந்நளையும் அரங்கில் நுழைதல்.)

அபிமன்யு:—இவன் யாரோ?

விஶாலவக்ஷாஸ்தநுராஜிமத்ய:
ஸ்திரோருதாம்ஸோந்நதபாஹு கடீக்ருஶ: ।
உதாஹ்ருதோ யேந ஸ்வைகயஷ்டிதோ
பலாதிகேநாபி ந சாஸ்மி பீடித: ॥

படர்ந்த மார்புடனும், சிறியதாய் ஒட்டிய வயிற்றுடனும், உயர்ந்து பருத்தவையான தோள்களுடனும், உருவத்தில் பெரியோனும், இடுப்பில் சிறியோனும், பெரிய தொடைகள் வாய்ந்தவனும் இருக்கிற இந்தப்புருஷன் யாவன்? மிக்க ஆற்றல் வாய்ந்த இவனால் நான் ஒரேகையால் கட்டிப்பிடிக்கப்பட்டாலும், துன்பத்தை அடையவில்லையே!

பிருகந்நளை:—குமாரன் இங்கே இங்கே.

அபிமன்யு:—

அயுக்தரூபைரபலாவிபூஷணை:
கரேணுஶோபாபிரிவார்பிதோ கஜ: ।
லகுஶ்ச வேஷேண மஹாநிவௌஜஸா
விபாத்யஸௌ வேஷதிவாஶ்ரிதோ ஹர: ॥

தகுதியற்றனவும் பெண்களுக்குரியனவுமான அணிகலன்களை அணிந்துகொண்டு, பெண்யானையின் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பெற்ற ஆண்யானையைப்போல், வெளிவேஷத்தால் தாழ்ந்தவ

ஞகக் காணப்பட்டாலும், ஒளியின்பெருக்கால் உயர்ந்தவனுயும், பார்வதியின்வேஷங்கொண்ட பரமசிவனைப்போன்றவனுயும் காணப் பெறுகிற இவன் யாவன்?

பிருகந்நளை:—(சற்றுவிலகி) அண்ணு! இவனை இங்கே கொணர்ந் ததில் தங்களுக்கு என்ன உத்தேசம்?

ஜவஜித ஐவ தாவகூ-ஷிதஃ வ-ஷிவ-ியாலெ
ஓயித வஸா தவியாக்ஷா ஸொவநீயா ஸாஹஸ்ரா।
ஜித ஐதி வாநரெ நம ராஷ்டூதெ வாஸாஹஜெ
ஹவ தா பஹூ கிஸாக்ஷம் ஓஷிதொ ஹஸ்தவாராஃ॥

(அபிமன்யு) முதன்முதல் நடந்தபோரில் தோல்வியால் இகழ்ச்சி யடைந்தானென்பதும், அருமையான புதல்வனைவிட்டுப் பிரிந்தவளான சுபத்திரையின் நிலைமை பரிதாபகரமானதென்பதும், மருகனுன அபிமன்யு தோற்கடிக்கப்பட்டான் என்று வாஸுதேவர் கோபங்கொள்வார் என்பதும் வேருக இருக்கட்டும்; வார்த்தைகளை வளர்ப்பதில் என்ன பயன்? சுருங்கச்சொல்லுகிறேன்; தங்கள் கைவலிமைக்கு இகழ்ச்சி நேர்ந்ததே.

பீமசேனன்:—அர்ஜுன!

பிருகந்நளை:—ஆம், ஆம்; இவன் அர்ஜுனன்புதல்வனே.

பீமசேனன்:—(சற்று விலகி)

ஜாநாஜெ்யதாஹிரு ஹாஷவஸ்ய தொஷாநு
கொவா வாதும் ஷே-ியெவுத்ராஹஜெ।
ஐஷாவதூா கிம்தா ஓஃவெ ஹி ஓஹா
வஸ்ய்தெ நம் ஜெளவதீத்யாஹயதொzயழ॥

இவனை வலிந்துபற்றியதால் உண்டாகும் தோஷங்களை நான் அறிவேன்; சத்துருக்களின்கையில் புத்திரன் அகப் பட்டிருக்கிறதைக்கண்டு எவன்தான் பொறுத்திருப்பான்? இது எவ்வாறிருப்பினும் குழந்தையின்பேரில் மிகவும் அன்புடையவ ளும், (இதுவரை காணுமல் வருந்துகிறவளுமான) துரோபதை இவனைக்கண்டு களிக்கட்டும் என்றே இவன் என்னுல் இங்கே கொணரப்பெற்ருன்.

பிருகந்நளை:—(விலகி) அண்ணு! (இவனுடன்) பேசவேண்டு மென்று எனக்கு மிகவும் ஆவலிருக்கிறது; இவனை வார்த்தையாடும் படிசெய்யுங்கள்.

பீமசேனன்:—நல்லது; அபிமன்யுவே!

அபிமன்யு:—எப்படி? எப்படி? நான் அபிமன்யுதானே. ஓ!

நீசைரவ்யுஹிஹாஷ்யெ நாஜிஹி: க்ஷத்ரியாந்வயா: ।
உஹாயம் ஸமுதாசாரோ க்ரஹணம் வரிஹூயதெ ॥

க்ஷத்திரியகுலத்திற் பிறந்தவர்களும் தாழ்ந்தோர்களால் பெயரைச்சொல்லி அழைக்கப்படுகிறார்களே! இதுதான் இவ்வூரில் வழக்கமோ? அன்றி, நான் பிடிபட்டதே, அவமதிப்புக்குக் காரண மோ?

பிருகந்நளை:—அபிமன்யுவே! உன் அன்னை சௌக்கியமாயிருக் கிறாளா?

அபிமன்யு:—கிம் ஹவாநு யுயிஷ்ராஜொ சஹீமஸெநொ யநஞ்ஜய: ।
யந்நாம விதுரவதாக்ஸ்ரீஶ்ரீ மதாம் வ்யூஹஸெ கயம் ॥

எனக்கு நீ தர்மராஜரா? பீமஸேநரா? தனஞ்செயரா? என்னிடம் மரியாதையில்லாமல் தகப்பன்போல் பெண்பிள்ளைகளைப் பற்றி வினவுகிறாயே? என்ன?

பிருகந்நளை:—தேவகீபுத்திரரான கேசவர் சௌக்கியமா?

அபிமன்யு:—அவர்களையும் பேரைக்குறித்து வினவுகிறாயா? ஆம், ஆம்; அவர்கள் உனக்கு உறவினரோ? சௌக்கியமே.

(இருவரும் ஒருவரையொருவர் பார்த்தல்.)

அபிமன்யு:—என்னைப்பார்த்து மரியாதையின்றிப் பரிகசிக்கிறாயே?

பிருகந்நளை:—ஒன்றுமில்லை;

வாயம் விதாஸ்யஸ்ய தாதஞ்ச ஜநார்தநம் ।
தாஸ்ய க்ருதாஸ்த்ரஸ்ய யுக்தோ யுஸவராஜய: ॥

தகப்பன் அர்ஜுனன் என்றும், ஜனார்த்தனன் அம்மான் என்றும் நினைத்திருந்தும், பாணங்களை எவ்வதில் நன்றாகப் பழக்கப்

பட்டும், காளைப்பருவத்தினனான நீ போரில் தோல்வியடைவது அழகோ?

அபிமன்யு:—வாய்க்குவந்தபடி பேசவேண்டாம்.

அலமாத்மஸ்தவம் கர்தும் நாஸ்மாகமுசிதம் குலே।
ஹதேஷு ஹி ஶராந் பஶ்ய நாம நாந்யத்பவிஷ்யதி॥

தற்புகழ்ச்சி வேண்டாம், அது எங்கள் குலத்துக்குப் பொருந்துவதன்று. என்னால் அடிபட்டு மாண்டவர்களின்மே லிருக்கிற பாணங்களைப் பார்ப்பாயாக; அவைகளில் என் பெயரைத் தவிர மற்றவர்பெயர் ஒன்றுமே காணப்படாது.

பிருகந்நளை:—(தனக்குள்) குமாரன் நன்றாகப் பேசுகிறான்.

ஸரதாஶ்வநாகப்ரவரயௌதே
ஶரநிபாதனே ந கஶ்சிதவ்யதித:।
அஹமேவ பரிக்ஷதோ பவேயம்
யதி ந யயௌ பரிவர்திதோ ரதோऽஸ்ய॥

இரதங்களுடனும், புரவிகளுடனும், கொழுத்த யானைகளுட னும், சிறந்த காலாட்படைகளுடனுமிருந்த சைனியமுழுவதிலும், அம்பெய்வதில் நிபுணனான (அபிமன்யுவால்) அடிபடாதவன் ஒரு வனுமேயில்லை; என்தேரைத் திருப்பாதிருந்தால் நானும் அடி பட்டேயிருப்பேன். (வெளிப்படையாக) இவ்விதம் வார்த்தையாடு தல் அழகுதான். வெறுங்காலாளால் ஏன் பிடிபட்டாயோ?

அபிமன்யு:—

அஶஸ்த்ரோऽபிஹிதஸ்தேந ததஸ்மி க்ரஹணம் கத:।
ந்யஸ்தஶஸ்த்ரம் ஹி கோ ஹந்யாதர்ஜுனம் பிதரம் ஸ்மரந்॥

ஆயுதமில்லாமல் அவன் என்னிடம் வந்தான்; ஆதலால் நான் பிடிபட்டேன்; தகப்பனாரான அர்ஜுனர் நினைவிலிருக்கும்போது, ஆயுதத்தை வைத்துவிட்டவனை (ஆயுதமில்லாதவனை) எவன்தான் கொல்வான்?

பீமசேனன்:—(தனக்குள்)

யந்த்ர: புத்ரோऽர்ஜுனேநோ நாம ப்ரத்யக்ஷரூபம் ஸூசித:।
பாதுஸ்ய பிது: ஶ்லாக்யம் ஸம்ஹ்ருஷ்டா ஶேஷபாந்தவா:॥

போரில் தன்னுடைய பராக்கிரமமும், புத்திரனுடைய பராக்கிரமமும், புகழத்தக்கவைகளான இவ் விருபராக்கிரமங்களும், அர்ஜுனனால் ஒருங்கே கேட்கப்பட்டனவாதலால் அவனே மேன்மைபொருந்தியவன்.

அரசன்:—அபிமன்யுவை விரைந்து அழைத்துவரவேண்டும்.

பிருகந்நளை:—இங்கே இங்கே குமாரன். இதோ மகாராஜா வீற்றிருக்கிறார்; குமாரன் சமீபத்தில் போகவேண்டும்.

அபிமன்யு:—ஆ! யாருக்கு மகாராஜா?

பிருகந்நளை:—இல்லை, இல்லை, இல்லை; பிராமணருடன் இருக்கிறார்.

அபிமன்யு:—அந்தணருடனா? (சமீபம் வந்து) பகவானே! நமஸ்கரிக்கிறேன்.

பகவான்:—குழந்தாய்! வா, வா.

𑌶𑍌𑌣𑍍𑌡𑍀𑌰𑍍𑌯𑌂 𑌧𑍃𑌤𑌿 𑌵𑌿𑌨𑌯𑌂 𑌦𑌯𑌾𑌂 𑌸𑍍𑌵𑌪𑌕𑍍𑌷𑍇
𑌮𑌾𑌧𑍁𑌰𑍍𑌯𑌂 𑌧𑌨𑍁𑌷𑌿 𑌜𑌯𑌂 𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌂 𑌚 ।
𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑌿𑌤𑌰𑌿 𑌗𑍁𑌣𑌾𑌨𑌵𑌾𑌪𑍍𑌨𑍁𑌹𑌿 𑌤𑍍𑌵𑌂
𑌶𑍇𑌷𑌾𑌣𑌾𑌂 𑌯𑌦𑌿 𑌭𑌵 𑌰𑍋𑌚𑌤𑍇 𑌚 𑌤𑍇𑌷𑌾𑌮𑍍 ॥

உன் தகப்பனான அர்ஜுனனிடம் விளங்கும் வீர்யத்தையும், தைரியத்தையும், வினயத்தையும், தன்னைச்சார்ந்தவர்களிடம் தயவையும், இனிய சொற்களையும், வில்வித்தையில் வெற்றியையும், ஒளியையும் நீ அடைவாயாக; உனக்கு விருப்பமிருந்தால், உன்னுடைய மற்றைத் தகப்பன்மார்களின் நற்குணங்களையும் நீ பெறுவாயாக.

அபிமன்யு:—அநுக்கிரகிக்கப்பெற்றேன்.

அரசன்:—வா! வா! பிள்ளாய்! நீ என்னை ஏன் வணங்கவில்லை? ஓ! இந்த க்ஷத்திரியச் சிறுவன் செருக்குடையவனாயிருக்கிறானே! இருக்கட்டும் இவனுடைய செருக்கை ஒடுக்குகிறேன். யாரால் இவன் பிடிபட்டான்?

பீமசேனன்:—மகாராஜா! என்னால்.

அபிமன்யு:-'ஆயுதமில்லாமலிருந்தவனால்' என்று கூறவேண்டும்.

பீமசேனன்:—அமங்களம் விலகட்டும், விலகட்டும்.

ஸஹஜௌ மே ப்ரஹரணம் ஹ்ரஜௌ பீநாம்ஸகோமளௌ ।
தாவாஸ்ரித்ய ப்ரயுத்யேஹம் துர்பலைர்க்ருஹ்யதே தநு: ॥

பருத்ததோள்களுடன்கூடி விளங்குகிறவைகளான என்னுடைய கைகளே எனக்கு ஆயுதங்களாகும்; அவைகளைக் கொண்டே நான் போர்செய்வேன்; வலியற்றவர்களாலன்றோ கையில் வில் எடுக்கப்படும்!

அபிமன்யு:—ஓ! அது அவ்வாறன்று;

பாஹ்வோரக்ஷௌஹிணீயஸ்ய நிர்வ்யாஜோ யஸ்ய விக்ரம: ।
கிம் பவாந் மத்யமஸ்தாத: தஸ்யைதத் ஸத்ருஸம் வச: ॥

எவருடையகையே அக்ஷௌஹிணியோ! (-பெரிய சைனியமோ!) எவருடைய பராக்கிரமம் மற்றொன்றையும் எதிர்பார்க்காதோ! அப்படிப்பட்ட (என்னுடைய) நடுத்தந்தையா நீ? அவருக்குத்தான் இவ்வுரையடுத்தது.

பகவான்:—பிள்ளாய்! நடுவன் என்பவன் யார்?

அபிமன்யு:—கேட்கவேண்டும், நாம் பிராமணர்களை எதிர்த்துச்சொல்லுவதில்லை.

அரசன்:—இருக்கட்டும். நான் கேட்கிறேன்.

அபிமன்யு:—கேட்கவேண்டும்;

யேந க்ருத்வா ஜராஸந்தம் கண்டஸ்லிஷ்டேந பாஹுநா ।
அஸஹ்யகர்ம தத் க்ருத்வா நீத: க்ருஷ்ணோSதத்ஹர்தாம் ॥

ஜராஸந்தனுடைய கழுத்தில் கையாலேயே சுற்றிக் கட்டிப் பிடித்து, ஒருவராலும் செய்யொண்ணாத அவனுடைய வதத்தையும் செய்து, ஸ்ரீகிருஷ்ணபகவானையே அதைச் செய்யமுடியாதவராக எவர் செய்தாரோ, அவரேதான்.

அரசன்:—

ந தே க்ஷேபேண ருஷ்யாமி ருஷ்யதா பவதா ரமே ।
கிமுக்த்வா நாபராத்தோSஹம் கதம் திஷ்டது யாத்விதி ॥

நீ என்னை எதிர்த்துப்பேசியதால், நான் சினங்கொள்ளவில்லை; என்னை நீ சினந்தாலும், அதனாலும் எனக்கு மகிழ்ச்சியே. இங்கேயே நிற்பாயாக என்பேனானாலும் அல்லது நீ போவாயாக: என்று உரைப்பேனானாலும் இருவிதத்திலும் நான் குற்றவாளியே!

அபிமன்யு:—எனக்கு உபகாரஞ்செய்யவேண்டுமானால்,

வாடியொஸ்ஸைஷாவாஃ க்ரியதாம் நிக்ரஹொவிதஃ।

஬ாஹுப்ஹ்யாஹ்ருதம் பீமோ ஬ாஹுப்ஹ்யாமேவ நேஷ்யதி॥

பிடிபட்டவனாக எனக்குக் கால்களில் விலங்குமாட்டுங்கள்; கைகளால் கொண்டுவரப்பட்ட என்னைக் கைகளாலேயே பீமர் கூட்டிப்போவார்.

உத்தரன்:—(அரங்கில் நுழைந்து) பொய்யான புகழுரைகளைக் கேட்பது மிகவும் துன்பம். துதிசெய்கிறவர்களான துதிபாடகர்களுக்கே பொய் பொருந்தியதாகும். நானே வென்றேனென்று புகழப்பட்டாலும், அவ்வார்த்தைகளைக் காதினால்கேட்டு, உண்மையில் நான் வெட்கமடைகிறேன். (நெருங்கிவந்து) பகவானே! வணங்குகிறேன்.

பகவான்:—நல்லது.

உத்தரன்:—அப்பா! வணங்குகிறேன்.

அரசன்:—பிள்ளாய்! வா. வா. நீண்டவாழ்நாளுடையவனாக இருப்பாயாக. போரில் தீரச்செயல்செய்தவர்களான படையாட்களுக்குப் பரிசில் நல்கினையா?

உத்தரன்:—ஆம், பரிசளிக்கப்பட்டார்கள். மிகவும்போற்றத் தக்கவரைப் பூஜிக்கவேண்டும்.

அரசன்:—பிள்ளாய்! எவரை?

உத்தரன்:—இங்கே பெரியோரான தனஞ்சயரை.

அரசன்:—எப்படி? தனஞ்சயருக்கு என்று?

உத்தரன்:—அவரால்,

ஶ்மஶாநாத்₃த₄நுராதா₃ய தூணீவாக்ஷயஸாயகே।

நூபாபீஷ்மாத₃யோ ப₄க்₃நா வயம் ச பரிரக்ஷிதா꞉॥

சுடுகாட்டிலிருந்து வில்லையும், குறைவுபடாத இரண்டு அம்பறுத்தூணிகளையும் எடுத்துவந்து, பீஷ்மர் முதலான அரசர்களும் தோற்கடிக்கப்பட்டார்கள்; நாமும் காக்கப்பெற்றோம்.

அரசன்:—இது இப்படியா?

பிருகந்நளை:—மகாராஜா! தயவுசெய்யவேண்டும்.

அயம் பா³ல்யாத்து ஸம்ப்⁴ராந்தோ ந வேத்தி ப்ரஹாராநபி।
க்ருத்ஸ்நம் கர்ம ஸ்வயம் க்ருத்வா பரஸ்யேத்யவக³ச்ச²தி॥

இவன் சிறுவனாயிருப்பதால் தானே அடித்தும், ப்ரமையால் அதை அறியவில்லை; எல்லாக்காரியத்தையும் தானேசெய்தும் பிறர் செய்தனர் என நினைக்கிறான்.

உத்தரன்:—தாங்கள் சந்தேகிக்கவேண்டாம்.

ப்ரகோஷ்டா²ந்தரஸம்கூ³ட⁴ம் கா³ண்டீ³வஜ்யாஹதம் கிணம்।
யத்தத் த்³வாத³ஶவர்ஷாணி நைவ யாதி ஸவர்ணதாம்॥

பன்னிரண்டுவருஷங்கள் கழித்தும் தன்னிறத்தை அடையாமலிருப்பதும் மணிக்கட்டில் மறைந்திருப்பதுமான காண்டீவத்தின் நாண்கயிற்றுத்தழும்பு பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகிறதே.

பிருகந்நளை:—

ஸ தத்³ நவாஸிஹாயர்ணாம் வ்யாவர்த்தநக்ருதம் கிணம்।
ஸம்ஹ்ரோயவிவர்த்தோ யாஸ்யா நஷ்ஹாமதம்॥

இறுகியிருக்கிறவையான என்னுடைய கைவளையல்களைத் திருப்பியதால், மணிக்கட்டில் தழும்பு உண்டாகியிருக்கிறது.

அரசன்:—அதைப் பார்ப்போம்.

பிருகந்நளை:—

ஶாத்ரவாணவஶீஷாம்ஸோ ய்ருஹம் ஹாரகாதஜ்ஜந:।
ஸர்வத்ரகம் ஹீசஸைநாய ஈயம் ராஜா யுதி⁴ஷ்டி²ர:॥

பரமேசுவரனுடைய பாணத்தால் தொடப்பெற்ற ஆகத் துடன்கூடினவனும் பரதவம்சத்திற் பிறந்தவனுமான அர்ஜுன னாக நான் இருப்பேனானால், இவர் பீமசேநர், இவர் யுதிஷ்டிர அரசரே.

அரசன்:—ஓ! தர்மராஜ! விருகோதர! தனஞ்சய! நீங்கள் என்னை ஏன் நம்பவில்லை? இருக்கட்டும், இருக்கட்டும்; தகுந்த சமயத்தில் அதைப்பற்றி ஆலோசிப்போம். பிருஹந்நளா! நீ உள்ளே போவாயாக.

பகவான்:—அர்ஜுன! உள்ளே போகவேண்டாம்; நாம் பிரதிஜ்ஞையை நிறைவேற்றிவிட்டோம்.

அர்ஜுனன்:—அண்ணா! கட்டளைப்படி.

அரசன்:—

𑌶𑍂𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑌤𑍍𑌯𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌂 𑌪𑌰𑌿𑌰𑌕𑍍𑌷𑌤𑌾𑌮𑍍 ।

𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌨𑌾𑌂 𑌨𑌿𑌵𑌾𑌸𑍇𑌨 𑌕𑍁𑌲𑌂 𑌮𑍇 𑌨 𑌕𑌲𑍍𑌮𑌷𑌮𑍍 ॥

சூரர்களும், உண்மையுள்ளவர்களும், பிரதிஜ்ஞையைக் காப் பாற்றுபவர்களுமான பாண்டவர்கள் இங்கே வசித்திருந்ததால் என் குலமே பாவமற்றதாயிற்று.

[தொடரும்.]

V. S ராமஸ்வாமிசாஸ்திரி, B.A , B.L.

பழநி மாம்பழக் கவிச்சிங்க நாவலர் சரிதம்.

1. தோற்றுவாய்.

சற்றேறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்னிருந்தே நமது தமிழகத்தில், அறிவுத்தெய்வமாகிய நாமகளின் பெருங்கருணைக்குப் பாத்திரர்களான செந்தமிழ்வாணர்கள், செஞ்சொல்லும், செவ்வியநடையும், அரியபொருளும், ஆழ்ந்தகருத்தும் அமைந்த இன்பக்கவிகளை இனிதுற இசைத்து அவைகளைத் தமிழறிவும், கொடைக்குணமும் நிரம்பிய செல்வர்கள்பால் எடுத்துச்சென்று அவர்தம் செவிகுளிரப் பாடி, அவர்கள் மனங்களித்து அளித்த அரும்பெரும்பொருள்களை வெகுமதியாகப்பெற்றுத் தம் வாழ்நாளை இன்புறக் கழித்துவந்தனர். இவ்வுண்மை சங்கநூல்களை உற்றுநோக்குமவர்க்கெல்லாம் செவ்விதிற் புலனாகும். இடைக்காலத்திலும், அதற்குப்பிந்தியகாலத்திலும் வாழ்ந்த வண்டமிழ்வாணர்களும் அம்முறையைப் பின்பற்றியே செல்வர்களைப்பாடி ஜீவித்துவந்தனர்.

கி. பி. 17-ஆம் நூற்றுண்டுமுதல் 19-ஆம் நூற்றுண்டுவரை தமிழகம், தமிழையும் அதனைக் கற்றுவல்ல புலவர்பெருமக்களையும் ஆதரிப்பதில் ஒருவாறு அன்புகுன்றி உறக்கமேற்கொண்டிருந்தது.

அயர்ந்துகிடக்கும் ஒருநாட்டை அல்லது சனசமூகத்தைத் தட்டியெழுப்பிச் சோர்வைப்போக்கி உற்சாகத்தையூட்டும் உயரிய சக்தி, இன்பச்சுவைபொங்க உணர்ச்சிதிடுக்கிடும்படி பாடவல்ல பாவாணர்களிடத்தே அமைந்துகிடப்பதாம். அத்தகைய சொற்சக்தி மிகுந்த மேலோர்களே அந்நாட்டையும், மக்களையும் தம்பால் அன்புகொள்ளவும், தம் இச்சைவழி இசைந்துநடக்கவும் செய்ய வல்ல ஆற்றலுடையவர்கள்,

அத்தகைய தெய்வாமிசம் உடையவர்களில் கி. பி. 1836-ஆம் ஆண்டுமுதல் 1884-ஆம் ஆண்டுவரை தமிழகம் புகழ மேம்பட்டு விளங்கிய பழநியூர் மாம்பழக்கவிராயரும் ஒருவர்.

இவர் குழந்தைப்பருவத்திலேயே இருகண்களேயும் இழந்த அந்தகராயினும், முத்தமிழ்விரகராகிய முருகப்பெருமானின் பேரன்புக்குரியராகித் தமிழை நனிசிறக்கக் கற்றுப் புலமைபெற்று ஒப்புயர்வற்ற திப்பியப்புலவர்களுள் ஒருவராகப் பெயர்சிறந்து விளங்கினர்.

இப்புலவர்பெருந்தகை, பல்வகைக்கவிகளேச் சுவைததும்பப் பாடிய பாவாணர்களின் அரியகருத்துக்களேயும், விழுமியபொருள் களேயும், விற்பனமிகுந்த கற்பனேகளேயும் ஆரச் செவிமடுத் துட் கொண்டு தேக்கெறிந்திருந்தனர். அதனுல் அவர் சுவையமுதெனக் கூறும் செய்யுட்களேயும் புதுப்புதுப் பிரபந்தங்களேயும் நவநவ மாய்க் கேட்போருள்ளம் உருகிப் பரவசமடையவும் மேலும் கேட்டு இன்புறவேண்டுமென்ற விருப்பம் மிகுதிப்படவும் அருமையாகப் பாடும் திறமையை இனிது பெற்றிருந்தனர். இப்பொழுதும் அக் கவிராயரது இன்பப்பாடல்கள் தமிழ்விருப்புடைய அறிஞர் செவிகளில் தொனித்துக்கொண்டிருக்கின்றன. அச்சிறப் பால், அக்கவிவலாருடைய தீஞ்சுவைமிக்க செந்தமிழ்க்கவிகளேச் சிந்தையுவக்கக்கற்று இன்புறவும், அறிவைப்பெருக்கிக்கொள்ளவும் இன்னமும் தமிழ்கற்ருேர் முந்திக்கொண்டிருக்கின்றனர்.

பழநி மாம்பழக்கவிச்சிங்கநாவலர்கவிகள், பளிச்சுப்பளிச் சென்று மின்னுகின்ற பதங்களில் பத்தரைமாற்றுப் பசும்பொன் போன்ற கருத்துக்களேயுடையவாய், இன்பம் ஊற்றெழும் சிருங் காரங்களும் *சிலேடைகளும், கற்பனேத்திரள்களும், விற்பன விளேவுகளும், அறிவுச்சுடர்களும், அன்பின்பெருக்கமும் மிகுதி யாகக்கொண்டவை. அம்மட்டோ! கவிராயருடைய சீட்டுக் கவிகள், மிடுக்கும் சொற்கட்டும் சந்தநிறைவும் இன்பக்குவியலும் செவிச்சுவையும் இனிதமைந்து ஏற்றம் மிகப்பெற்றவை. இவ் வற்புதக் கவிசிருஷ்டி இவருக்கென்றே அமைந்ததொரு தனிப் புதுமை.

---

* சிலேடை - உபயார்த்தச்சொற்ருெடர்.

கவிராயர் இவ்வுலகவாழ்வை நீத்தார்; அவருடன் அவருடைய முத்துமுத்தான மொழிகளும், தங்கக்கட்டிபோன்ற கவிகளும் எங்கேயோசென்று மறைந்தன. அவைகளைக் கண்டுபிடிப்பது எளிதானகாரியமன்று. ஒருகால், அவைகளை வறிய புலவரில்லங்களிலுள்ள பழம்பேழைகளிலும் பரண்களிலும், மூலைமுடுக்குகளில் தொங்குகின்ற ஓலைத்தூக்குகளிலும் காணலாம். அங்ஙனம் காணினும், அளவற்ற அன்புவைத்துப் பொன்போல் அவற்றைப் போற்றிக் காத்துவரும் அவர்கள், அவைகளைப் பொதுநலங்கருதி வெளியிடுவோர்க்கு மனமுவந்துகொடார்கள். அவர்களிடமிருந்து அவைகளைப் பெற்றாலும் செப்பஞ்செய்து அச்சுவாகனத்தேற்றுவதும் கடினமானது.

மாம்பழக்கவிச்சிங்கம், பிற்காலத்துப் புலவரெனினும் மற்றைப்புலவரினும் தகுதியிலும் புலமையிலும் தாழ்ந்தவரல்லர். இவருடைய அருமைப்பாடல்கள், புதுமையையும் இன்பத்தையும் அதிகரிக்கச்செய்யும் அற்புதசக்தியுடையவை; வாழ்க்கைவரலாறு மனத்தை உருக்கத்தக்கது. புலவர் சமீபகாலத்தில் வாழ்ந்தவராகவிருந்தும், அவருடைய வரலாற்றை அறிஞர் எவரும் முறையாகத் தொகுத்து எழுதிவைத்தாரில்லை. 1908-ஆம் ஆண்டில் ஜூன்மீ 5உ வெளிவந்த கவிச்சிங்கநாவலர் பிரபந்தத்திரட்டு என்ற நூலின் முகவுரையில் கவிராயர்வரலாறு சுருக்கமாக வரையப்பட்டுள்ளது. அதுவும் முற்றக்கற்ற மூதறிஞர்க்கன்றிச்சாமானியருக்கு விளங்காத கடினமான வசனநடையுடையது. இக்குறைநீங்கி விரிந்த வரலாறாகக் கவிராயர்செய்தி வெளிவரவேண்டுமென்பது நம் விருப்பம்.

புலவர்கள்வரலாறு எழுதுகின்றவர்கட்கு இக்காலத்தில் போதிய ஆதாரங்கள் கிடைப்பது அரிது: அங்ஙனம் அரிதாய்க் கிடைப்பினும் அவைகள் சிதல்வாய்ப்பட்டும் ஏடுகிழிந்தும் எழுதியோர்பிழை மலிந்தும் முதலும் கடையும் குறைந்தும் கிடைக்கும்; அவைகளைச் சீர்திருத்தியும், ஆராய்ந்தும், தனிப்பாடல்களைக் கவனித்தும், கன்னபரம்பரையைத் தழுவியும், பெரியார்வாய்ச் சொற்கேட்டும் வரலாற்றை உருவாக்கவேண்டும். அவ்வாறு உருவாக்கப்பட்டதே இவ்வரலாறு என்பது மேல் வருவனவற்றால் விளங்கும்.

2. ஊரும்—நாடும்.

"பூமணமு மின்னார் புழுகுமண மும்புலவோர்
பாமணமும் வீசும் பழநி" (பிரபந்தத்திரட்டு.)

"பூம கட்குமற் புதநெடுந் திறலணி புனிதக்
கோம கட்குநெட் டிதழ்விரி பங்கயக் கோவின்
மாம கட்குமின் னமுதுறழ் கவிவலார் வழுத்து
நாம கட்குமோ ருறையுளாங் கொங்கு நன்னாடு"
(துடிசைப்புராணம்.)

காளமேகம்போற் கவிமழை பொழியும் பேராற்றலும், கற்பனை சிறந்து விற்பனம் விளையும் உள்ளமும், வாசாமகோசரமாய் வசனிக்கும் வாக்குவன்மையும், நற்றமிழ் தவழ்ந்து நலம்பெற மிளிரும் நாவும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவர், "கவிச்சிங்கம்" என்ற சிறப்புப்பெயர்பெற்ற நமது மாம்பழக்கவிராயராவர். இவர் பத்தொன்பதாம்நூற்றாண்டில் தமிழகத்தில் விளங்கியிருந்தனர். அக்காலத்தில் தென்னாடெங்கணும் இவர்புகழ் பெரிதும் பரவியிருந்தது. இங்ஙனம் புகழ்மிக்குப் பெருமையுடன் விளங்கிய இப் பெரியார் பிறப்பகம், ஆவினன்குடி போதினி வைகாவூர் சிவகிரி சித்தன்வாழ்வு முதலிய திருப்பெயர்களைச் சிறப்புப்பெயராகவும், காரணப்பெயராகவும் பெற்றுத் திருப்பொலிந்துவிளங்கும் பழநியூராம். இத்திருத்தலத்தை அருந்தமிழ்ப்புலவர் ஒருவர்,

"அன்ன மளிக்குமூர் அண்டினரைக் காக்குமூர்
சொன்ன மழைபோற் சொரியுமூர்—உன்னினர்க்குத்
தீதுபிணி தீர்க்குமூர் செவ்வே ளிருக்குமூர்
ஓது திருப்பழநி யூர்."

என்று பாடியிருக்கின்றனர். இப்பாடலால் பழநிப்பதியின் அருமைபெருமைகளும், ஏற்றமும் இனிதுவிளங்கும். இத்தகைய ஏற்றமிக்க பழநிப்பதி மாம்பழக்கவிச்சிங்கநாவலர்காலத்தில் 'வைகாவூர்' நாட்டைச் சார்ந்திருந்தது*. இந்நாட்டைச்சார்ந்த

* இது, 'கோடுலாவிய முத்து நிறைத்த வைகாவூர்நாடதிற் பழநி' (திருப்புகழ்) என்பதாலும் விளங்கும்.

ஊர்கள் பதினெட்டு. அவை—கோதைமங்கலம், கலையம்புத்தூர், மானூர், இறையன்மங்கலம், மடத்தூர், கடத்தூர், கணியூர், கண்ணுடிப்புத்தூர், கோட்டத்துறை, மேற்கரைப்பட்டிவூர், கொழுங் கோண்டான், தேவதாகுடி, ஆய்குடி, அமரர்பூண்டி, மணிச்சிலம்பு, கோழுமம், வாழ்கரை, பழநி என்பன. நாடுகளின் பகுப்பும், ஊர் களின் பிரிவும் பண்டைக்காலத்துத் தமிழரசர்கள் செய்தவை. மக்களின் நலங்கருதி நாட்டுக்கூட்டமும், ஊர்க்கூட்டமும் கூடும். கலியாணம் முதலிய விசேடகாலங்களில் நாட்டுக்கும் ஊர்க்கும் அதனதன் தகுதிக்கேற்பத் தாம்பூலமரியாதைகள் செய்யப்படும். அப்பழக்கம் இன்றைக்கும் வழக்கத்திலிருக்கிறது. வைகாவூர் நாட்டுக்கு அழகுசெய்வதாக அக்காலத்திற் கொங்குமண்டலமிருந் தது. இம்மண்டலத்தை அக்காலத்தில் அரசுசெய்தவர் 'சேர-சோழ-பாண்டியர்' எனும் மூவேந்தருமாவர்; அவர்களுக்குப்பிறகு மைசூர்க் கங்கவரசர்களும், அவர்களுக்குப்பின் விஜயநகரமன்னர்களும் ஆண்டனர். இவர்களுள், சேரவரசர் ஆளுகையைப்பற்றித் திருப்புகழிலும், அவிநாசித்தலபுராணத்திலும் கூறப்பட்டிருக்கிறது. அவை,

"ஆதி யந்தவு லாவாசு பாடிய சேரர் கொங்குவை காவூர்க ணுடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே"

"சேரன்நெடுந் செங்கோன்முறை யென்றுந்திகழ் நாடு
கேரளகொங் கப்பேர்பிர சங்கங்கிளர் நாடு"

என்பன. சமீபகாலத்தில்தான் பழநியூர், பாண்டிமண்டலத்தைச் சார்ந்து அம்மண்டலத்திற்குரிய எட்டுத்தாலூகாக்களில் ஐந்தாம் தாலூகாவின் தலைநகராக எண்ணப்பெற்றது. தமிழ்நாட்டுக்குத் தெற்கெல்லையாகக் கன்னியாகுமரி விளங்குவதுபோலக் கொங்கு மண்டலத்திற்குப் பழநி தெற்கெல்லையாகத் திகழ்கின்றது. இது,

"வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு மதிகிழக்கு
நடக்கும் புகழ்க்குளித் தண்டலை யோர்தரம் நாடமுத்தி
கொடுக்குங் குளிர்வெள்ளி வெற்புக் குடக்காக் குலவினதால்
வடக்குத் திசைக்கிறை யன்னவர் வாழ்கொங்கு மண்டலமே"

என்னும் கொங்குமண்டலசதகத்தால் உறுதிபெறுகின்றது.

இத்திருத்தலம், பிறதலங்களைவிட மூர்த்திப்பெருமையில் முன்னணியில்வைத்தெண்ணக்கூடிய எற்றம்பெற்றது. கலியுகவரத னுகவும், கண்கண்டதெய்வமாகவும் திகழும் தண்டபாணி இங்கு ஆலயங்கொண்டு அருள்புரிகின்றனர். இத்திருத்தெய்வம் ஆலயங்கொண்டருள்வதே இத்தலத்திற்கோர் தனிச்சிறப்பாம். இச் சிறப்பிற்குரிய திருப்பதியில் மாம்பழக்கவிராயர் தோன்றினு ரெனில், இதன் பெருமை அளவிடற்பாலதோ!

---

3. பிறப்பும்—பெற்ருேர்களும்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் ருேன்ருமை நன்று" (திருக்குறள்)

அன்பு, அறிவு, கல்வி, கேள்வி, சான்ருண்மை, ஒழுக்கம், உயர்குணம், உத்தமபத்தி, ஒப்புறவொழுகுதல் முதலிய நன்னலங் களிற் சிறந்தும், "வஞ்சநெடும் பாவ மயக்கையெல்லாம் தீயி லிட்ட–பஞ்செனவே செய்யும் பழநி"ப்பதியில் தேரோடும் தெற்கு வீதியில் வீடுகொண்டுவாழ்ந்தும், இல்லறத்தை நல்லறமாக்கியும், எளியார்க்கும் இரந்தார்க்கும் இயன்றன உதவியும், அறம் வளர்த் தும், குலங்காத்தும், இனத்தாருடன் இன்னுறவுகொண்டும், நல்லான் என எல்லாராலுஞ் சொல்லிப் புகழப்பெற்றும் "முத்தைய ஆசாரி" விளங்கினர். இவர், தன்னந்தனியனுய்த் தண்டூன்றிய கையனுய்த் தண்டபாணிப்பெயரினனுய் நின்றதிருக்கோலத்தில் வெள்ளிய திருநீற்றுப்பூச்சும், உருத்திராக்கவடமும், காவியுடை யும் அணிந்த திவ்வியமங்களத்திருவுருவுடன் தேசிகமூர்த்தியாகத் திகழும் முருகன் திருவடிகளைத் தினமும் மறவாது பூசித்து வந்தனர். இப்பூசனையும், பூருவபுண்ணியப்பயனும் ஒன்றுகூடியத ஞல், முத்தைய ஆசாரியார்க்கு, கி. பி. 1836 ஆம் ஆண்டுக்குச் சரியான மன்மத ஆண்டில், நற்கோள்கள் தந்தம் ஆட்சி உச்ச வீடுகளில் கேந்திர திரிகோணங்களிலிருக்கும் நன்னுளில் அமுத வேளையில் 'அம்மணியம்மாள்' என்னும் பெயரிய அவர்தம் மனைவி வயிற்றில் இரண்டாம் திருப்புதல்வனுக 'மாம்பழப்புலவர்' பிறந்த னர். இவருக்கு முன்பிறந்தான்பெயரும் மாம்பழம் என்ப.

இங்ஙனம் தோன்றிய புதல்வனது பிறந்தநேரத்தைக் கூறி அவனது யோகபாவத்தை அறிந்து இன்புறவேண்டுமென எண்ணிய பெற்றோர்கள், சோதிடநூல்வல்லார்களை வரவழைத்து அவர்களிடம் தம் கருத்தைக் கூறினர். அவர்கள் பாலனது ஜாதகத்தைக் கூர்ந்து கவனித்துக் கணிதவிதாயத்தைக்கொண்டு நுட்பமாக ஆராய்ந்து, நற்கோள்களின் நிலைகளுக்கு மிகமகிழ்ந்து முத்தைய ஆசாரியைநோக்கி, “ஐயா! நும் இளம்புதல்வன் ஜாதகம் மேலான யோகமுடையது; இப்பாலன் இளமையிலேயே கவிபாடுந் திறமுடையவனுவன்; கல்விக்கடல் எனவும் கலாமேகம் எனவும் பெயர்சிறப்பன்; புலமையில், ‘இவனுக் கிணையாக இப்புவியில் யாருமே இலர்’; என்று வியந்துகூறும் அத்துணை ஏற்றம் இவன் பெறுவன்; இவன்கீர்த்தி தமிழ்நாடெங்கணும் பரவும்; யாரும் இவனைக் காண விரும்புவர்; அரசர்கள், ஜமீந்தார்கள், பிரபுக்கள், செல்வர்கள் ஆகியோரால் பெரிதும் உபசரிக்கப்பெற்றுக் கனகதண்டிகை, பொற்குவியல், பட்டுப்பீதாம்பரங்கள், கெண்டையுருமால், ஜோடி சால்வை, பெட்டிவண்டி, சலங்கைமாடுகள் முதலியவைகளை அவர்களிடம் பரிசாகப்பெறுவன்; நல்ல அழகனுமாய்க் கம்பீரத்தோற்றத்துடன் விளங்குவன்” என்று கூறினர். அவர்களுடைய நன்மொழிகளைக்கேட்டு ஆகம்பூரித்த முத்தைய ஆசாரி, சோதிடர்களுக்கு நல்ல வெகுமதியளித்து விடையளித்தனர்.

---

4. பெயரும்—காரணமும்.

“அதிமதுர ரசமாகத் தன்வாக்கில் வரும்பாக்கள் அமைதலாலே
மதிமிகுமாம் பழமெனும்பேர் நக்கதெனுங் கவிச்சிங்கம்”
(பிரபந்தத்திரட்டு.)

நலம்பலசிறந்த நமது நற்றமிழ்நாட்டில் விளங்கிய மக்கள், தங்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்குப் பெயரிடுவதைப் பல்வகையாகக் கைக்கொண்டிருந்தனர். சைவர் பரமசிவன், பசுபதி, கங்காதரன், சிவசம்பு, சோமசுந்தரன் என்னும் சிவபெருமான்பெயர்களையும், வைணவர் கோவிந்தன், கோபாலன், மாதவன், கிருஷ்ணன், முகுந்தன் என்னும் திருமாலின்பெயர்களையும், குமரனடியார்கள்

பழனியப்பன், வடிவேலன், முருகன், கந்தன், கார்த்திகேயன் என்னும் முருகக்கடவுள்பெயர்களையும் வைத்து வழங்கிவந்தனர். இவையன்றிச் சிலர், திருப்பதி வெள்ளியங்கிரி மருதமலை சென்னிமலை சிவகிரி முதலிய மலைகளின் பெயர்களையும் மக்களுக்கிட்டு வழங்குவதுமுண்டு. இஃதிவ்வாறாக; வேறு சிலர், தம் குடும்பத்து முன்னோர்கள், தமது புலமைமிகுதியால் அரசர்களிடத்துப் பெற்ற கவிகுஞ்சரம், பாலபாரதி, வெண்பாப்புலி, சிலேடைப்புலி, முத்தமிழ்க்கவி, சர்க்கரை, சாந்து, சவ்வாது என்னும் காரணச் சிறப்புப் பெயர்களைத் தம் புதல்வர்களுக்கு ஞாபகார்த்தமாகவும் குடும்பப் பெருமைகருதியும் பிறர் புலமைக்குடும்பம் எனப் பெயரால் அறிந்துகொள்ளுமாறும் இடுவதை மேற்கொண்டிருந்தனர். இம்முறையைப் பின்பற்றியே முத்தைய ஆசாரி தம்முன்னோர்களில் ஒருவர் பெற்றிருந்த "மாம்பழம்" என்ற பெயரைத் தம்மக்களுக்கு வைத்துவழங்கினர்.

மாம்பழப்பெயர் முத்தையபத்தர்முன்னோர்களில் ஒருவர் பெற்றிருந்தனர் என்பதற்கு இரண்டு வரலாறுகள் கூறப்படுகின்றன.

முத்தையஆசாரிகுடும்பத்துமுன்னோர் ஒருவர், வேதாகம சாத்திரங்களையும், திருக்கோயில் நிருமாணிப்பதற்குரிய சிற்பக்கலைகளையும், புராணவகைகளையும் ஐயந்திரிபறக் கற்று, அவற்றின் திட்ப நுட்ப ஒட்பங்களைக் கேட்போர் செவிகளிக்கவும், மனதில் தெளிவாகப் பதியவும் இனிமைபெற எடுத்தோதுவதில் திறமை மிகப்பெற்றிருந்தனரென்றும், அங்ஙனம்மொழியும் அவர்வாக்கும் வன்மைமிக்க பிரசங்கமும் மேலான மாம்பழச்சாற்றின் இன்சுவைபோல் மதுரமிகுந்திருந்ததற்கு அகமிக மகிழ்ந்த மதுரை நாயக்க மன்னர்களில் கல்வி, கேள்வி, அறிவு, ஆண்மை, ஈகை, தெய்வபக்தி, அன்பு முதலியவற்றில் மிக்குயர்ந்த ஒருவர், அச்சிற்பாசாரிக்கு "மாம்பழம்" என்ற பெயரை அன்பின்மிகுதியால் சிறப்புப்பெயராகச் சூட்ட அப்பெயரே அச்சந்ததியில் தோன்றிய பிள்ளைகளுக்குக் குடிப்பெயராகவைத்துவழங்கப்பட்டு வருகிறதென்பதொன்று.

மாம்பழக்கவிராயரின் ஏழாந்தலைமுறைப்பாட்டனார் ஒருவர், சிற்பக்கலையினும், கோயில் மண்டபங்கள் முதலியவற்றைச் சிற்ப

நூல்விதிவழாது சமைப்பதிலும் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையென்னும்படி உயர்வுபெற்றிருந்தாரென்றும், அவர், இப்பொழுது மாடமிக்க மதுரைமாநகரில் காண்போர் கண்களுக்குநல்விருந்தாகத் திகழ்வதும், சிற்பசித்திரங்களுக்கோர் வைப்புநிதியாக விருப்பதும், இருபத்திரண்டு ஆண்டுகளில் இருபதுலட்சம்பொன் செலவில் முற்றுப்பெற்றதும், நீண்ட சதுரவடிவில் 105 அடி நீளமும், 33 அடி அகலமும் உள்ளதும், அழகிய உருவத்திற் காட்சியளிப்பதுமாகிய *வசந்தமண்டபத்தைக் கட்டத்தொடங்கி, அது பெரும்பாகம் முடிவுபெற்றுக்கொண்டிருக்கும் அமயத்தில் அவருடைய அருமைப்புதல்வன், திடீரென மாம்பழத்தின்மீது நினைவுகொண்டு, மாம்பழம் அகப்படாத காலத்தில் தனக்கு மாம்பழம்வேண்டுமெனப் பிடிவாதத்துடன் புலம்பினன்; அவனது அழுகை பலமாயிருந்தது. எவ்விதம்சமாதானப்படுத்தியும்சிறுவன் அழுகையை விட்டானில்லை; அதனை அப்பொழுது அங்கிருந்து கவனித்துக்கொண்டிருந்த மதுரையரசரும், தர்மதாதாவும், ஆண்டவனுக்கு அழகிய ஆலயங்களை ஆயிரம்வகையாகச் சமைப்பதில் அவாமிகுந்தவரும், வசந்தமண்டபத்திருப்பணியின் மூலகர்த்தருமாகிய †திருமலைநாயக்கரவர்கள் தமது அரண்மனைக்கு ஓர் ஆள்விடுத்து, அங்கோரிடத்தில் அருமையாக வைக்கப்பட்டிருந்ததும், இயற்கை மாம்பழமே என்று கருதக்கூடிய அத்துணை அமைப்புடையதுமான தங்கமாம்பழத்தை யெடுத்துவரச்செய்து அழுங்குழந்தைக்களித்துச் சமாதானஞ்செய்தனர்; மாம்பழம் பெற்றதும் குழந்தை அழுகையை நிறுத்தியது; அதுமுதல் அச்சந்ததியில் தோன்றும் குழந்தைகட்கெல்லாம் மாம்பழம் என்ற பெயரே வழங்கப்பட்டுவருகிறது என்பது மற்றொன்று.

சித்திரக்கலையிலும், சிற்பக்கலையிலும் தமிழர் எவ்வளவு முன்னேறியிருந்தனரென்பது மேற்குறித்த செய்தியால் விளக்கமாகின்றது. ஆயிரம் ஆண்டுகளுக்கு அப்பாலும், அதற்கிப்பாலும்

---

* இது, இப்போது புதுமண்டபம் என வழங்கப்படுகிறது.

† திருமலைநாயக்கர்காலம் கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியாம்.

விளங்கியிருந்த தமிழச்சிற்பி இன்றைக்கும் நம் எதிரில் சாவா வுடம்புடன் காணப்படுகின்றான். தமிழன்பர்களே! தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தாகாலத்திற் கட்டப்பட்ட கோபுரங்களையும், அழகிய கல்மண்டபங்களையும் நாம் கண்கொண்டு காண்மின்கள். சிற்பி தனது கைவன்மையெல்லாங்காட்டிச் சித்திரித்த சித்திரங்களும், சிற்றுளிச் செதுக்குவேலைகளும் நமது நேத்திரங்களுக்கும் புலனாகும். அவற்றுள் இங்குக் குறிப்பிடற்குரிய சிறப்புமிக்கதும் கண்விருந்துபோன்றதுமான மதுரை வசந்தமண்டபம், தென்னாட்டுக்குத் திலகமாகத்திகழும் திருப்பழநியில் தோன்றிய தமிழ்ச்சிற்பியால் சித்திரிக்கப்பெற்றதெனின், அச்சிற்பி சிறப்புடன் போற்றத்தக்க பெருமையுடையவனே யாவன். அறிவுமிக்க அச்சிற்பி குடியில், அக்கோத்திரத்தின்புகழ் மறைவுபடாமல் துலங்குமாறு அச்சிற்பியமைக்குங் கோயிலேபோல அழகிய செய்யுளையமைக்கும் கவிச்சிங்கநாவலர்தோன்றி அத் தொல்குடிக்குச் சிறப்புப் பெயராக வழங்கப்பட்டுவரும் "மாம்பழம்" என்ற பெயரைப் பெற்றனர்.

கவிராயர் மாம்பழப்பெயர்பெற்றதற்குக் கன்னபரம்பரை வரலாறு இவ்வாறாக; இவரது இயற்பெயர் 'பழநியப்பன்' என்பதும், இவருடைய பெற்றோர்கள் தண்டபாணியை நோக்கித் தவங்கிடந்து அவர் வரப்பிரசாதத்தாற் பிறந்ததுகொண்டு இவர்க்குப் பழநியப்பன் என்று பெயரிட்டனரென்பதும் கவிராயர்குடும்பத்தில் 90-வயது கடந்த தொண்டுகிழவரை நாம் நேரில் சென்று விசாரித்தபோது அவரால் தெரியவந்தன.

[தொடரும்.]

சி. கு. நாராயணசாமிமுதலியார்.

ஸ்ரீ:

மதிப்புரை.

1. அவிநாசித்திருத்தலச் சிறப்பு. 2. வில்லிபுத்தூரர்சரிதம். 3. திருக்குறள் பற்றி அறிஞர் ஆராய்ந்துகண்ட அருமலர்க்கோத்து:— இவை, பழநித்தலமகிமை திருப்பேரூர்த்தலமான்மியம் திருப்பேரூர்த்தலச்சிறப்பு முதலிய தலவிசேடங்களையும், வாதாவி சாளுக்கியமன்னர்கள் வரலாறுகளையும், ஒட்டக்கூத்தர் புகழேந்தியார் அருணகிரிநாதர் இரட்டையர் படிக்காசுப்புலவர் பொய்யாமொழியார் முதலிய தமிழ்ப்பெரும்புலவர் சரிதங்களையும் தொகுத்து வெளியிட்டவரும் தமிழ்ப்பற்றும் தமிழாராய்ச்சியும் மிக்கவரும் ஆகிய திருவாளர் சி. கு. நாராயணசாமிமுதலியாரவர்களால் ஆராய்ந்து தொகுத்து இனியநடையில் எளிதிற் பொருள்விளங்குமாறு அழகு பெற அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

இவற்றுள் அவிநாசித்திருத்தலச்சிறப்பு, கொங்குநாட்டின் பெருமை அவிநாசித்திருத்தலமகிமை மூர்த்திமான்மியம் தீர்த்த விசேடம் சுந்தரர் முதலையுண்டபாலனையழைத்தமை அவிநாசிக் கருகிலுள்ள சிவதலங்கள் அவற்றிலுள்ள சிற்பசித்திரங்கள் முதலிய பலவிஷயங்களை ஆராய்ச்சிமுறையில் விரித்து விளக்குவது. தலயாத்திரை செய்வார்க்குமட்டுமன்றி மற்றெல்லார்க்கும் பல்லாற்றானும் பயன்படுவது. இப்படியே ஏனைத்தலமான்மியங்களும் எழுதி வெளியிடப்படின் அது பேருபகாரமாகும். இவ்வரிய பணிக்குப் பொருளுதவிபுரிந்தவரும் திருப்புக்கொளியூரில் புது நந்தவனமமைத்துப் பூப்பணிசெய்துவருபவருமான திரு. அ. கி. சுவாமி கருணாலயமூர்த்திகளுடைய தமிழ்ப்பற்றும் சமயப்பற்றும் பாராட்டற்பாலன. இதன் விலை அணா 6.

வில்லிபுத்தூரர் சரிதம், தோற்றுவாய் என்பது முதல், இறுவாய் என்பதிறுதியாகவுள்ள இருபத்தைந்து தலைப்புக்களில், வில்லிபுத்தூரார் பிறந்த நாடு, நகரம், பெற்றோர், சமயம், தமிழ்ப்பயிற்சி,

காலம், சமகாலப்புலவர், பாரதம்பாடியது, கவிமாண்பு முதலிய பல பொருள்களை மேற்கோள்களுடன் நன்கு விரித்துரைப்பது, சரித்திர ஆராய்ச்சிசெய்வார்க்கும் பிறர்க்கும் பயன்படுவது. கலா சாலைமாணவரால் விரும்பிப் படிக்கத்தக்கது. இதன் விலை அணு பத்து.

திருக்குறள் பற்றி அறிஞர் ஆராய்ந்து கண்ட அருமலர்க்கோத்து, தமிழறிவும் ஆராய்ச்சித்திறமும் நிரம்பிய திரு. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் முதலிய அறிஞர் எண்மர் ஆராய்ந்து எழுதிய எட்டுப் பொருளுரைகளை யுடையது. திருவள்ளுவர் பெருமை திருக்குறளின் பெருமை திருவள்ளுவர்சமயநிலை காலம் என்பவை முதலாகத் திருக்குறளை அயல்நாட்டினர் போற்றி மொழிபெயர்த்துப் பயின்றுவருமாறு இறுதியாகப் பல விஷயங்களைப் புதிய ஆராய்ச்சி முறையில் விரிப்பது. இதன் விலை அணு ஆறு.

கன்னபரம்பரை முதலிய பல்லாற்றானும் தெளிவின்றிக் கிடக்கும் சரிதவாராய்ச்சி காலவாராய்ச்சி முதலிய துறைகளிற்புக்கு உண்மைகாண்டற்கு முயலும் முதலியாரவர்கள் மேலும் பல ஆராய்ச்சிகளை யெழுதி வெளியிடுமாறு இவற்றைத் தமிழ்மக்கள் ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

மேற்குறித்த புத்தகங்கள் வேண்டுவோர், 'திருவாளர். சி. கு. நாராயணசாமிமுதலியாரவர்கள், கலைமகள் தமிழகம், 147. தாமஸ் வீதி, கோயம்புத்தூர்' என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்.

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

முப்பத்துநான்காந்தொகுதி.

Vol. 34.

தாது—ஈசுவர ௵

1936 — 1937.

பத்திராசிரியர் — திருநாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

முப்பத்துநான்காந் தொகுதியுள்ளுறை.

அநுபந்தம்.

I. விஷயங்கள்.

II. நூல்கள்.

[முற்றுப்பெற்றவை.]

[முற்றுப்பெறாதவை.]

என்னை நினைந்து அவன் வருந்தாது காத்தலும் உன்கடமைதான். அகத்துறு துன்புக் கமிழ்தெனு மருந்தாய்த் துய்ரோட்டி நலனூட்டுவதே காதலியின் கடமையன்றோ?

சுலோசனை:—நீங்கள் செல்லும் கங்காயாத்திரைக்கு யானும் வருவேன்.

யமுனை:—சந்திரன் இங்குவரின் நம்மிருவரையும் காணாது மனந்தளர்வனே.

சுலோசனை:—உங்கள் குமாரரும் மேற்குநோக்கித்தான் சென்றிருப்பார். நாம் எதிரில் சந்திக்கலாம்.

யமுனை:—அது என்ன நிச்சயம்?

சுலோசனை:—சந்தேகமில்லை.

யமுனை:—சிறுமியாகிய நீ என்னுடன் வருதல் தகுதியன்று. பொதுவிடம் பலவற்றினும் தங்கிச்செல்லும் தனியாத்திரையில் பருவப்பெண்ணான நீ உடன்வரல் தகாது.

சுலோசனை:—ஒரு சிறுவன் உம்மைத் தொடர்ந்துவரின் உமக்கு உதவியாயிருப்பானன்றோ?

யமுனை:—உன் அழகின்மிகுதியாலும் அங்கங்களின் மென்மையாலும் யாரும் எளிதில் உன்னைப் பெண்ணென்று தெரிந்துகொள்ளல்கூடும்.

சுலோசனை:—உம்மைவிட்டகலாது உமக்குப் பணிவிடைசெய்திருப்பின் என்னை யார் நெருங்கியறியப்போகிறார்கள்?

யமுனை:—உன் தமயன் மிக்க துயரத்தையடைந்து வருந்துவனே. உடன்பிறப்பின் மேம்பட்ட நண்பனும் இன்றித் தன் அருமைத்தங்கையையும் பிரிந்து அவன் எங்ஙனம் உயிர்வாழ்வன்?

சுலோசனை:—யான் இரண்டு மூன்றுமாதத்தில் திரும்பிவிடுவதாக அவருக்கு ஒரு கடிதத்தை எழுதிவைத்துவிட்டுவந்துவிடுகிறேன். அக்காலம்வரை நீங்களும் இல்லாமையால் அவர் சந்திரன் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படிக்கும் எழுதிவைக்கிறேன். அவர் அங்ஙனம் இருப்பார்.

யமுனை:—நீ சொல்வதை மறுக்க என்னாலாகாது. உன்விருப்பப்படி செய்.

சுலோசனை:—இன்றிரவே புறப்பட்டுவிடுவோம்.

யமுனை:—நீ குழந்தைத்தனமாய் என்னுடன் புறப்படுவது சரியன்றென்று என்மனத்தில் தோன்றுகின்றது.

சுலோசனை:—உமக்கு இன்னொருமகனிருப்பின் அவனை அழைத்துச்செல்லமாட்டீரா? அப்படி நினைத்துக்கொள்ளும். யான் இரவில் வருகிறேன். சன்னத்தமாயிரும். [விடைபெற்றுச் செல்லுதல்.]

அங்கம் - III.

களம் – 1.

இடம்:—சிந்துநதிக்கரையில் அலக்ஷயேந்திரன் படமாடம்.

பாத்திரங்கள்:—அலக்ஷயேந்திரன், புருஷோத்தமன், சேனாபதிகள், சேவகர்கள் முதலியோர்.

அலக்ஷயேந்திரன்:—புருஷோத்தமரே! நம் தூதர்கள் சொல்லியதைக் கேட்டிருந்தீரா? மகதராஜன்சொற்கள் என்மனத்தை யீட்டிபோற் குத்துகின்றன. நான் செய்யும் யுத்தத்தைப் பழித்து எனக்குத் தீங்குநேருமென்று சொல்லக்கூடிய முடிமன்னனொருவன் படிமிசை உயிர்வாழ்வனோ? அவன் திறத்தை இன்றே அறிவேன்.

சேனாபதி:—பாரசீகராஜ்யமுழுவதையும் ஒருகணத்தில் வென்று கைக்கொண்ட உங்களுக்கு இது ஒரு பெரிதா?

புருஷோத்தமன்:—மகதன்பெருமையை நீங்கள் அறியீர். அவன் தேசத்தின் செழிப்பும் குடிகளின் ஊற்றமும் படைகளின் வலியும் செல்வத்தின் மிகுதியும் யாரால் அளவிடமுடியும்? அவனே ஒரு பெரிய போர்வீரன், அவன் சேனைத்தலைவரும்

நேபாளம் காந்தாரம் முதலிய மிலேச்சர்களும் முரடர்களும் வசிக்கும் தேசங்களில் நெடுநாள் போர்புரிந்து தேர்ந்தவர்கள்.

சேனுபதி:—அரசே! அவர்கள் படைவலியை நம் தூதர்கள் கணக்கிட்டுவந்திருக்கிறுர்கள். ஐம்பதாயிரம் தேர்களும் லக்ஷம் யானைகளும் 2 லக்ஷம் குதிரைகளும் ஐந்து லக்ஷம் காலாட்களும் இவரறிந்தமட்டில் மகதனுக்கு இருக்கின்றனவாம். இவைதவிர எல்லைக்காப்புச் சேனைகளும், கோட்டைகாக்கும்படைகளும் சிற்றரசர்படைகளும் மிகுந்திருக்கின்றனவாம். தூதர்தலைவரே! நான் சொன்னது சரிதானே?

தூதர்தலைவன்:—ஆம். அது மட்டுமேயன்றி அவன் நாட்டு வில்லாளிகளின் திறம் மிகவும் மெச்சத்தக்கது. புடைத்தெழு தோளும் துடித்தெழு வீசையும் உடையராய் அவர்கள் தம்மினும் உயர்ந்தவில்லைத் தரையில் ஊன்றி அடியை இடக்காற்பெருவிரலால் மிதித்துத் தலையை இடக்கையால் இழுத்து வளைத்து நாணினை இறுகச்சுற்றி அயின்முகக்கணைகளும் அரைமதிவாளிகளும் கோத்து, மரங்கள் கிழியவும் கற்கள் பிளக்கவும் எய்யும் வல்லமையுடையவர். இருப்புக்கவசங்களைத் தகர்த்தும் தேர்களை உடைத்தும் வீரர்களைத் தலைதுணித்தும் அவர்களம்புகள் தடையின்றி மேற்செல்லும். கதையெடுத்துப் பொருவோர்கையாற் சிதைபடாதபொருள் பிரமன்படைப்பில் ஒன்றுமில்லை. கோட்டைகளைத் தகர்க்கவும் மதில்களை யிடிக்கவும் பூமியில் சுரங்கங்கள் வைக்கவும் அளவிறந்த பொறிகள் அவர்கள் நாட்டில் உள. பகைவரை மறைந்திருந்தாவது பொறிகள்வைத்தாவது கொல்லும் வழக்கமே அவர்நாட்டில் இல்லையாதலின், அவைகளுக்கு உதவக்கூடிய ஆயுதங்களொன்றும் அவர் அறியார். துன்புற்றோர்க்குதவலும் இரந்தோர்க்களித்தலும் எளியோரை ஆதரித்தலும் ஆகிய இவற்றை உடன்பிறந்த குணங்களாக்கொண்டு அறமும் ஆண்மையும் சேர்ந்திருக்கப்பெற்றுளர். அவர் நடுவில் நான் வதிந்தநாள்களை என் ஆயுள் உள்ளவளவும் மறவேன்.

சேவகன்:—[தொழுது] அரசே! நம் படமாடவாயிலில் மகதன் தூதர்கள் காத்திருக்கிறுர்கள்.

அலக்ஷயேந்திரன்:—அவர்களை உடனே உள்ளே அழைத்து வா.

தூதர்கள்:—[வணங்குதல்.]

தூதர்தலைவன்:—ஆண்டகாய்! எம்மரசன்வாழ்த்தையும் எம் வந்தனத்தையும் ஏற்பீராக.

அலக்ஷயேந்திரன்:—தூதர்களே! நல்லசமயத்தில் வந்தீர்கள். நாங்கள் உங்கள் நாட்டைப்பற்றித்தான் உரையாடிக்கொண்டிருக்கிறோம்.

தூதர்தலைவன்:—அதுவும் எங்கள் பாக்கியந்தான். எங்கள் மன்னர் கட்டளையின்படி நாங்கள் இன்றைக்கு முப்பதாம்நாள் உங்கள் மறுமொழிபெற்று எங்கள் ஊர்போய்ச் சேரவேண்டும்.

அலக்ஷயேந்திரன்:—உங்களுக்கு யான் சொல்லவேண்டிய மறுமொழி என்தூதர்களால் உம்மரசர்பக்கல் சொல்லப்பட்டதுதான்.

தூதர்தலைவன்:— அரசே! சினங்கொள்ளாதீர். தர்மத்தைச் செகுத்துப் பாபம் மேம்படாதென்பது உமக்குத் தெரியாதா? தாமரைகள் மலர்ந்து மணம் வீசவும், வண்டுகள் பாடவும், அன்னங்கள் சஞ்சரிக்கவும், மீன்கள் மிளிரவும் பக்கத்தில் மயில்கள் ஆடவும் அழகுடன் விளங்கும் பொய்கையில் ஆசையுடன் இறங்கி அதைக் கலக்கி அழகழித்துத் தானும் அங்குள்ள முதலைவாய்ப் பட்டழியும் மதயானைபோல் அறநினைந்தொழுகுமான்றோர் பலர் வதியும் எங்கள் நாட்டையும் ஊறுசெய்து நீரும் சீரழிதல் மேன்மையாகாது.

தெய்வமே பரவி மெய்வழி தெரிந்தாங்
குய்யுமா றன்றியெக் காலும்
கைதவ மகற்றிக் களிப்புறு மனத்தோ
டைவகைப் புலன்வலி யறுத்துப்
பெய்வினைக் கையர் பெட்பினின் மயங்கா
தெப்தக விதிமுறை யாற்றி
வைவற முடலால் ஞானமிக் குயர்ந்தோர்
நலியலு றுறையுரா டதுவே.

இத்தகையோர் உயிரினும் உடலினும் பற்றற்றமனத்தராய் வதியும்நாட்டில் நீர் வீண்போர்செய்து குற்றமற்றவர்களான எம் மரசர்குடிகளுக்குத் தீங்குவிளைக்க முயலவேண்டாவென்றும், அப்படி நீங்கள் முயன்றால் உங்களுக்கு மிகுந்த கேடுவருமென் றும் எம்மன்னர் சொல்லினர்.

அலக்ஷயேந்திரன்:—எனக்குக் கேடுவிளைக்க உங்களரசரால் ஆகாது. இவ்வாறுதான் பாரசீகனும் சொல்லி என்கையால் மாண்டனன். உங்கள் உபதேசம் எனக்கேன்.

தூதர்தலைவன்:—தர்மத்தைப் பாபம் வெல்லாதென்று நாங் கள் கூறவந்தது உபதேசமாகுமோ? எங்கள் நாட்டில் தர்மம் மலிந்திருப்பதோடு படைவலியும் மிகுந்துளது.

தூயவெண் முந்நூல் பூண்டு சுருதியின் கரைகள் கண்டு
தீயடு வேள்வி முற்றித் திரவியப் பற்று நீத்துக்
காய்சின மகற்றிக் கல்வித் துறைகடந் தறிவு முற்றி
யாயென வளிசெய் நெஞ்சத் தந்தணர்க் கரச னெந்தை.

இத்தகைய பிராமணோத்தமரின்வடிவமாய்த் தருமமே எங் கும் திரிதரும் எம் நாட்டை மாற்றரசர் வெல்லல் முடியாது. மேலும் எம்மரசன்படையினர்க் கெதிர்நிற்க உம்மாள்களால் முடியுமா?

நிழலினைச் சிறிக் கந்தை நெறித்தொடித் தீர்த்துத் தூணைக்
கழையெனச் செகுத்துக் காந்திக் கையெடுத் தலறி யோடி
மழைமத வருவி சோர வண்டினம் தொடர்ந்து செல்லப்
பொழிலிறுத் தடங்கிப் பாகின் புடைதொடர் கரிகள் சுற்ற.

எம்மன்னர் போர்க்கெழுந்து களங்கொள்ளின் உம்மவர் அவர் மாட்டுச்செல்லாது புறங்காட்டியோடுவர்.

அலக்ஷயேந்திரன்:—உங்கள் யானைப்படையின் திறத்தை நாம் புருஷோத்தமனுடன் செய்தபோரில் அறிந்துகொண்டோம்.

தூதர்தலைவன்:—வங்காளத்தில் விலைப்படாமற் கழிபட்ட யானைகளை நீர் வெல்வதற்குப் பட்டபாடு எங்கள் நாடுமுழுதும் நகைக்கிடமாயிற்று. இன்னும் எம்முடைய மற்றைப்படைகளின் வலியையும் கேட்பீராக.

தூணியும் வில்லும் ஏந்தித் துணிவுடை மனத்த ராகி
ஆணையை யாற்றித் தத்தம் ஆருயிர் மதியா ராகி
ஆணவம் அரசர் தெய்வம் அன்புடை நாடென் றின்ன
பேணுதல் பெரிதாய் முந்தும் பெட்பினர் பெயர்ந்து செல்ல.

பால்புரை புரவி பூண்டு பகழிபெய் வீர ரேந்தி
மேலுயர் கொடியின் சீரை மாற்றல ராற்றல் துற்றக்
கால்வழிக் கால்கள் மாளப் பால்படு படைகள் சிந்தக்
கோல்கொளும் சூதன் உந்தக் கொதித்தெழும் கொடித்தேர் சுற்ற.

விரைதரு பரியின் வீரர் வேலொடு வாளும் ஏந்தித்
தரைதரு துகள் கிளப்பித் தாரகைக் கணமறைத்து
நுரைதர மோதிச் சிந்தி நூறிடும் போதில் நீவிர்
திரைதரு கடல்வாய்ப் பட்ட செய்மணற் குன்றே யாவீர்.

புருஷோத்தமன் எங்கள் சிற்றரசர்க்குக் கப்பங்கட்டும் ஒரு நாட்டுத்தலைவருக் கிடாகான். எங்கள் வில்லாளிகளின் கணைகள் உங்கள் இருப்புச் சட்டைகளைக் கிழித்துப் பாயும் வலியுள்ளன. எங்கள் தேர்வீரர் பொருதுசெல்லும் வேகத்தில் உங்களுக்குப் போர்முகந்தெரியாது தலைதடுமாறிப்போகும். எங்கள் குதிரை வீரர்க் கெதிரில் உங்கள்படைஞர், பொங்கியெழும் கடலின் அலைகளின்கீழ் நெய்தற்பயிரென இருந்தவிடந்தெரியாது மறைந் தழிவர். இதுகாறும் வெற்றியும் கீர்த்தியும் பெற்றுவந்தநீர் இனி மேற்செல்லத்துணிவீராயின் வெற்றியும் கீர்த்தியும் மகதனுக்கு விட்டுவிட்டுப் பாவமும் பழியும் மாத்திரம் சுமந்து திரும்புவீர். குறுநாட்டுவேந்தனாகிய பாஞ்சாலனையும் நாகரிகமற்ற காட்டுமக்களையும் வென்றதை வெற்றியாகக்கொண்டு மகதன்மாட்டுச் சீரழியாதீர்.

காறுறை கள்வர் தம்மைக் கடிந்ததோர் வலியைக் கொண்டு
மானிடர் ஏத்தும் மன்னன் மகதனை வெல்ல லாமோ
கூறுகிர்ச் சிங்கங் கொல்லும் குருளைமா னெனினு மற்றை
வானுயர் சரபத் தின்பால் வலியழிந் திறக்கு மன்றே.

அலக்ஷ்யேந்திரன்:—[சற்றுக் கலங்கி] சரி. நீங்கள் போய்வரலாம்.

தூதர்தலைவன்:—எங்கள் சக்கரவர்த்திக்கு நாங்கள் என்ன சொல்லுவது?

சேவகன்:—[தொழுது ஒரு ஓலையைக் கொடுக்க.]

அலக்ஷ்யேந்திரன் : — [அதைவாசித்துவிட்டுப் புருஷோத்தமரை நோக்கி] பாஞ்சாலரே! உம்முடைய சேனாதிபதி சத்ருஜித் நமக்கு ஒரு வீரரை அனுப்பியுள்ளார். [சேவகனைநோக்கி] சேவகா! இவ் வோலைகொணர்ந்தவரை உள்ளே வரவிடு.

சந்திரன்:—[பல சிற்றரசர்கள் பின்வரப் புகுந்து சற்றுத் தலைவணங்கிக் கைகுவித்து] அரசர்பெருமானே! என் அஞ்சலி ஏற்பீராக. என் தலைவர் சத்ருஜித்தின் ஆணைப்படி இந்நாட்டுத் தலைவர்களைப் புருஷோத்தமர்பால் சேர்ப்பிக்க வந்தேன். அது காரணமாக உம்மைக் கண்டது என் பெரும்பேறே. [புருஷோத்தமனிடம் ஒரு ஓலையைக் கொடுத்து] எம்மரசே! கப்பங்கொடாது காலந்தள்ளிவந்த இவர்களைப் பிணித்துவரும்படி தாங்கள் சேனைத்தலைவருக்கு உத்தரவு செய்திருந்தபடி இவர்களை உம்மடியிற் சேர்க்கிறேன்.

புருஷோத்தமன்:—[சிற்றரசர் தொழ ஓலையைவாசித்து] சந்திரரே! நீர் உம்முடையபெயருக்கு மாறாக இவர்களிடத்தில் சூரியனைக் காட்டிலும் வெம்மைவிளைத்ததாக உம்முடைய போர்வலியை மிகவும் மெச்சி எம் சேனைத்தலைவர் எழுதியிருக்கிறார். யானறிந்தமட்டில் அவர் ஒருவர் போர்வலியையும் மெச்சுகிற வழக்கமில்லை. அவரே இவ்வளவு புகழ்ந்துபேசத்தக்க உம்முடைய போர்வலி மிகவும் மேம்பட்டதாகவே யிருக்கவேண்டும்.

சந்திரன்:—அரசே! எம் தலைவர் என்னைப்பற்றிப் புகழ்ந்திருப்பின் அது என்னிடத்தில் அவர்வைத்திருக்கும்மிகுந்த அன்புபற்றித்தானிருக்கவேண்டும். அவருடன்சென்று அவர்பணித்ததைச்செய்ததுதவிர வேறெந்தவிதமும் யான் இந்தப்போரில் முயலவில்லை.

அலக்ஷ்யேந்திரன்:—தலைவன் பணித்ததையாற்றுதலே போர் வல்லார்க்கரிதென்பதும், அங்ஙனம் செய்துமுடித்தல்தான் மிகுந்தபோர்வலியென்பதும் உமக்குத் தெரியாதா! கடலின்விரிந்து உலகெலாம் வெல்லவல்ல என் சேனையில் அங்ஙனம் செய்யவல்லோர் சிலர்தாம் உளர். அவரே மேற்பதவிகளுக்குரியராய் என்பக்கலிருந்துதவுவர். ஆதலின் நீர் ஒரு பெரிய போர்வீரரே. மேலும், இவ்விளமைப்பருவத்தில் இவ்வளவுதிறம்வாய்தல் மிக அரிது. நீர் மகதநாட்டவரோ?

சந்திரன்:—ஆம். அரசே! எம் நாட்டில் அந்தணர் மறையும் வைசியர் வணிகமும் கற்பதுபோல் க்ஷத்திரியராகிய நாங்களும் இளம்பருவத்திலேயே தகுந்த ஆசிரியரிடம் தேகப்பயிற்சிசெய்து கொண்டு, பின் வில் வேல் வாள் என்னும் சிறந்த படைக்கல வகைக ளிற் பயின்று, அதன்பின் யானை குதிரைகளை நடாத்தவும் தேரூர வும் தெரிந்துகொள்வோம். எம்மூரில் பிழைப்பற்றுவந்த என் னைக் கண்டு தாங்கள் மகிழ்கிறீர்கள். என்னினும் இளமையிலேயே தாம் தனிநின்றுபொருது பெரும்படைபழிக்கும்வலியுள்ள வீரர் அளவிறந்தோர் அங்கு உளர்.

அலக்ஷயேந்திரன்:—[தூதர்தலைவனைநோக்கி] இவர்கள் அரசன் தான் தனியே பொருவதாய்ச் சொன்னானன்றோ?

தூதர்தலைவன்:—ஆம் அரசே!

சந்திரன்:—அவர் அங்ஙனம் செய்பவல்லவரே. இதினும் மிகப்பெரிய சேனையையும் அங்ஙனம் பொருதழிப்பர். உங்கள் இருப்புச்சட்டைகள் அவர் வாளின்முன் மின்னலின்முன் இருள் போற் பிளவுபடும். உங்கள் ஆயுதங்களெல்லாம் அவர் வயிரகவசத் திற்பட்டுக் கல்லின்மேல் விழும் மழைத்துளிகள்போற் சிதறுண்டு பயன்படாதுபோம். அவரேயன்றி இன்னும் அளவிறந்தோர் அவ ரினும் தேகப்பயிற்சியினும் படைப்பயிற்சியினும் மிகுந்தோர் எங் கள்நாட்டில் இருக்கின்றனர்.

அலக்ஷயேந்திரன்:—அப்படியாயின் அவர்வலியை நான் காண வேண்டும்.

சந்திரன்:—போர்முனையிற் காணவேண்டுமென்று நீர் ஆவல் கொண்டால் அது நஞ்சின் சுவையறிவதுபோல் கண்டபின் நீர் உயிருடனிருக்கமுடியாது. எம்மரசரோடு நேசஞ்செய்துகொண் டால் வீரர்பயிலும் சாலைகளிற் காணலாம்.

அலக்ஷயேந்திரன்:—நீர் அச்சாலையிற் பயின்றவர்தாமோ?

சந்திரன்:—ஆம். சிலகாலம்.

அலக்ஷயேந்திரன்:—உம்மைப் பரீக்ஷிப்போம். [தூதர்களை நோக்கி] தூதர்களே! நீங்களும் நாளை இதைப் பார்த்துவிட்டுச் செல்லலாம்.

2164 ஓங்கியதண் ணளியறந்தான் கலியுகமே
லடியிடவே யொற்றைத் தாளி
னீங்கிடரெய் துபுதளர்போ தினிவிறந்த
காலமெடுப் பவனே யாகிப்
பாங்குடைத்தன் னடுவுநிலை கொல்லாமை
வாய்மையெனும் பதமோர் மூன்றாற்
றாங்குவனென் றெதிர்கருதித் தாதையறந்
தாங்கியெனத் தாபித் தானே. (அ)

2165 *தழற்பாணி கறைகெழுவச் சிரபாணி
மிளிர்படிகத் தாமம் வேய்ந்த
நிழற்பாணி விழைந்தகமண் டலபாணி
முதலெவர்க்கு நிபனே யாய்வேய்ங்
குழற்பாணி கொடுதொறுவின் குழுவழைத்த
மழைமுகில்பார் குளிர்ப்பா னீன்ற
கழற்பாணி தனைப்புகழ்சக் கரபாணி
யனைத்துயிர்க்குங் களைக ணவான். (கூ)

2166 மறத்திகிரிப் படைதரித்த வருளாளன்
மலரினிற்றெண் மருந்திற் றோன்றுந்
திறத்திகிரிப் புளகமுலைச் சுவடணைவான்
பரனெனவத் திடந டாத்து
மறத்திகிரிப் படையினைக்கைக் கோடலிற்சக்
கரபாணி யாகி யாசைப்
புறத்திகிரிப் பொருப்பினுக்கப் புறத்திருமர்
நிலவெழும்வண் புகழா னன்றே. (க0)

2167 பச்சுதரத் தகிலாண்டத் துயிர்க்கணமே
கோதகத்திற் படியா வண்ணம்
வைச்சுதரக் கொடுங்கனறாற் றுவகையோர்
புடைபதுக்கி மறித்து மீன்று
மொச்சுதரப் புவியினைமூ வடியெனத்தா
யவன்றனக்கே முழுது மாட்செ
யச்சுதர்தம் பெருமையையா ரறியாதார்
மூவுலகத் தடைந்து ளாரே. (கக)

2168 சிதரனே பரனெனுமத் திடம்பயின்று
மறைமுழுதுந் தெளிந்த கேள்வி
முதுணர்வா ரடியவர்தம் மடியவரெம்
மடிகளென முத்தி சேர்ந்தும்
பூதவுடம் பழிவதல்லாற் புகழுடம்பு
பொன்றாது புவனி மீதுண்
டாதலினா லச்சுதனும் பெயர்திடனா
மெனுமவனுக் ககில மன்னோ. (கஉ)

2169 மாந்தராற் சமைந்தபடை யாதுளவென்
றிகழ்ந்தொழிந்த வரங்கள் வாணி
காந்தரா லிசைந்தெழுதென் னிலங்கையர்கோ
னுயிர்செகுப்பான் கணையொன் றேவி
வேந்தர்வேந் தெனுஞ்சனகன் புதல்வியொடுந்
திருநகர்க்கு மீண்டோர்க் காட்செய்
சேந்தர்வாய் மையைப்புகழ்தற் கெளியதோ
வெணையனையார் சிறுசொற் கன்றே. (கங)

2170 பரனளித்த மூதண்டத் தயனமைத்த
பதிகள்பதி னாலி னுள்ளா
ரானளித்த வெஃகினெடு மார்கலிச்சூர்
கடிந்தவொரு மயில்வாழ் வெய்தி
வானளித்த காந்தியுடைச் செம்மையொடு
நலத்தகைசால் வள்ளி யோனால்
அரனளித்த சேந்தனுமச் சுதனளித்த
சேந்தனுமொப் பாமென் பாரே. (கச)

2171 தங்கண்ணன் பிலராகிப் படைத்தழிப்போர்
தமைத்தொடர்ந்து சரத வாய்மை
பொங்கண்ணந் தழும்புபடப் புகழ்ந்திழிந்து
போவதல்லாற் புரைதீர் காவல்
எங்கண்ணன் றனக்கடிமைத் திறம்புரிவார்
மதம்பழிப்பா ரிகலைக் காய்ந்த
செங்கண்ணன் புகழ்புகுதாத் திசையுளவேற்
கதிர்புகுதாத் திசையுண் டாமே. (கரு)

2172 நஞ்சமே யெனத்தெறுநல் குரவடைந்தோர்
நல்குரவா னடுக்குற் றார்கள்
தஞ்சமே சரணெனுமுன் முகமலர்ந்தின்
சொலிற்களிகூர் சால்பி னோடு
மஞ்சனீ ரெனவெதிர்கொண் டக்கணத்தங்
கவர்குறித்த தளித்தற் காகச்
செஞ்செவே யருள்புரிநோக் குடைமையிற்செங்
கண்ணனெனுந் திரைநீர் ஞாலம். (கசு)

2173 நீர்க்கழிவா ரிதிசூலவும் புவியனைத்து
மொருகுடைக்கீழ் நிழற்றல் போற்றி
வார்க்கழியா தெழுமுலையார் பொற்கலத்தேந்
தமிர்தினையும் வயின்வந் தேயேற்
பார்க்கழியா துவகையிற்பாத் தருந்தரசர்
பெருந்திருவென் பதுவு மல்லாற்
போர்க்கழியார் பெருந்திருவிற் களகையர்கோன்
பெருந்திருவும் புன்மைத் தாமே. (கஎ)

2174 கூற்றுவனிற் கொலைபயில்வன் களிற்றினிற்கொய்
யுளைப்பரியிற் கொடித்திண் டேரின்
மாற்றமுறச் செருக்களம்புக் கிகல்விளைப்போர்
போர்க்கழியா மரபி னாலும்
போற்றியவைம் பொறிவழிபுன் புலன்விளக்கும்
போர்க்கழியாப் புரைநீர் ஞானந்
தேற்றமுறுந் திறத்தாலும் போர்க்கழியா
ரெனப்புணர்பேர் சிறந்த தன்றே. (கஅ)

2175 வேரியார் செழுங்கமலத் திருமார்பத்
திறைநிலையே விழைமெய்ஞ் ஞானச்
சீரியா ரடியவர்தம் மடியவர்தம்
மடியவர்க்காட் செய்யு மேன்மைக்
கூரியா ருயிர்க்குயிராம் போர்க்கழியார்
தவம்படிவங் கொண்ட தொன்றுங்
காரியார் பொருட்டினின்மே தினியடைந்த
பயன்றனக்கோர் கைம்மா றுண்டே. (கக)

2176 திவணங்காட் டியநரகத் திடையமுந்த
வுயிர்செகுக்குந் தீமை யோர்க்கு
மூவணங்காட் டியமுதல்வர்க் கொருமுதலாய்
நின்றமுதற் கடவு ளாய
பூவணங்காட் டியைமருமத் திடைதரித்த
பொருளிவன்கை பொறித்த செந்தீட்
டாவணங்காட் டிஇமுவந்து தரும்பரம
பதமென்று லறைவ தென்னே. (உ0)

2177 ஊனிவர்செஞ் சுடராழித் தடக்கையினன்
றிலகமுத லொருமூ வர்க்குங்
கானிவர்மெய்த் தவமுனிவர்க் கொருதிலகம்
வசிட்டனெனுங் காட்சி யாளன்
வானிவர்வண் புகழ்த்தருமன் குருகுலத்தார்க்
கொருதிலக மாசி லாத
தேனிவர்பைத் தார்வழுதி கிழவன்மர
பினுக்கிவனோர் திலக மாமே. (உக)

வேறு.

2178 செல்வத் துறைக்குப் புரந்தரனைத்
தேருந் தொறுஞ்சிந் தையையுருக்குங்
கல்வித் துறைக்குத் தமிழ்முனியாய்க்
காட்சித் துறைக்குக் கவினழியாச்
சொல்லித் தகமன் மதனெனலாய்ச்
சுரபி யெனத்தண் ணளிபயின்ற
நல்வித் தகனெண் ணிரண்டெனலாம்
பருவ மதனை நயந்தானே. (உஉ)

இருபதாவது திருமுடியடைவுச்சருக்கம் முற்றும்.

உக. பெண்பேசுசருக்கம்.

2179 பெருவாழ் விணங்கும் பொறையுடையோன்
பேராச் சிறப்பிற் புவிதனக்கைங்
தருவா யறிஞர் தவந்தழைப்பத்
தருமந் தழைப்பத் தழைதருநாண்
மருவார் மலர்ப்பெ ணணங்ககலா
மாயோ னுறைவண் பரிசாரத்
திருவாழ் மார்ப ரிடத்துதித்த
திருவின் றிறமிங் கினிப்புகல்வாம். (க)

வேறு.

2180 மருந்துதித் ததனுட் டோன்று
மலருளாட் கமைந்த பொற்பு
மருந்துதிக் கமைந்த கற்பு
மவனியாள் பொறையும் விண்ணோர்
பெருந்துதிக் கமைந்த மேன்மைப்
பெண்ணியல் பெருக்கி வேலை
பொருந்துதிக் கமைந்த மண்மேல்
வெளிவரும் புதுவ தன்னுள். (உ)

2181 சுழித்தெழு துவதொன் றில்லாச்
சுருதிக்கு முதலே நிற்ப
தழித்தெழு துவதொன் றில்லா
வரியெனும் பெரிய நாமங்
கழித்தடங் கடற்கண் ணார்தங்
கற்பினை யெண்ணும் போழ்தம்
மொழிக்குமுன் னிற்ப தந்த
முற்றிழை மடந்தை கற்பே. (ங)

2182 பெருங்குலத் தொண்மை சான்ற
பெருங்குடிப் பிறந்த பெண்ணிற்
கருங்கல மனைய தொன்று
யாவியிற் சிறந்த தாகிச்

சுருங்கலின் ருய நாண
முதலிய நான்குந் தோற்ற
மொருங்குடை மையினுன் ஞால
முடையநங் கையெனு மன்னே. (௪)

2183 சேயென மலரிற் றேன்றுந்
திசைமுகன் றனைப்பெற் றாளைத்
தாயென வுடைய நங்கை
தண்ணளி யுடைய நங்கை
வேயெனத் திரண்ட தோளார்
விரும்புமுத் தமநன் கற்பு
நீயெனக் குடைய நங்கை
யெனவுரை நிகழ்த்து நீராள். (௫)

2184 பூசுரர் துறவு பூண்டு
பொறியடக் கினர்க ளில்லின்
மாசற வைகு மாதர்
மணமனை புகுந்து கற்பிற்
காசிக ளறைவ திம்ப
ரருந்ததி யெனலாய் வாழ்ந்த
தேசுடை நங்கை போலச்
சிறத்திரென் றுரைப்ப தாமே. (௬)

வேறு.

2185 நள்ளிருட் பிழம்பினை நளினப் போதினு
னள்ளிமென் சுருள்படுத் தழகி னூற்றபின்
றெள்ளிதி னெறித்துநீண் டடர்ந்து செவ்விகூ
ரொள்ளிதி னறுவிதா யமைத்த வோதியாள். (௭)

2186 வளரியல் பின்றியும் வைக றேறுமெய்
தளரியல் பென்பதுந் தவிர்ந்து தெண்ணிலாக்
கிளரியற் பிறைநுதற் கோலங் கிதவண்
டுளரில விதழினு ருணர்வை யுண்ணுமே. (௮)

2187 உருவிலா னுருகெழு சிலையு மும்பர்கோன்
செருவிலாண் டொழில்புரி சிலையு நாணுறத்
தருவிலாம் வனப்பின புருவந் தண்குமிழ்
பொருவிலா மூக்கெனப் புகழ்தல் புன்மைத்தே. (கூ)

வேறு.

2188 நெய்யுண் டன்றினர் நீணிறம் போழ்ந்தவர்
மெய்யுஃ டாவியை மீளவு முண்டுபோய்த்
துய்யுண் செஞ்சுடர் தூண்டுர னுண்டவேன்
மையுண் செவ்வி மதரரிக் கண்களே. (க0)

வேறு.

2189 நித்திலத் திரளினை நிரைத்த தாமெனும்
உத்தம முறுவலுக் குவமை யில்லையால்
வித்துரு மமுமமு தளாய மென்மைகூர்
தத்துவம் பெறிலிதழ்க் குவமை சாலுமே. (கக)

2190 திருந்தின புலமையோர் செவியுஞ் சிந்தையும்
பொருந்தின வியற்றமிழ் பொருவு மேன்மையும்
அருந்தினர் புறத்தொரு சுவைக்கென் றன்புறு
மருந்தின தினிமையும் வளர்க்கும் வாணியே. (கஉ)

2191 பங்கயத் திறைவனம் பாத்து வெண்மதி
சிங்கலுற் றமையுறீஇச் சிறப்பின் மாசறக்
கங்குலும் பகலுமோர் காட்சித் தாய்ப்புணர்
மங்கல மதியமாம் வதன மென்பதே. (கங)

2192 குண்டலம் புனைந்தொளி குலாய வள்ளையந்
தண்டெனக் கவின்பெறத் தழைந்த காதுதா
முண்டதுட் புகப்புறந் தோன்று மொண்மைசால்
கண்டமு நாகிளங் கமுகின் வண்ணமே. (கச)

2193 தண்ணற வருவிநீ ரருவி தாழ்ந்துவீழ்
வெண்ணிற மழைதவழ் வெற்பிற் றோன்றுவ
கண்ணவிர் மணிவடந் தாளக் காழ்கொளீஇப்
பண்ணமைத் தெழுந்தவெண் படாம்பெய் கொங்கையே.()

வேறு.

2194 வீக்கம் பற்றிய வெம்முலை மேனிலத்
தாக்கம் பற்றிய தாங்கொ ரளவையா
மோக்கம் பற்றிய மூதுணர் வாலன்றி
நோக்கம் பற்றரி தாநுண் மருங்குலே. (கசு)

வேறு.

2195 இணையென வெழிலிசைந் தெழுந்த மேதகு
பணையென வணையெனப் பணைத்த தோளிணை
கணையெனத் திரண்டதாட் கமலப் போதுகைத்
துணையெனச் சிறந்தன துணியுங் காலையே. (கஎ)

வேறு.

2196 நிறங்கொள் வாழை நிரலிணைத் தண்டையே
குறங்கின் செவ்விக் கிணையெனக் கூறுவார்
மறங்கொள் வாளிகள் வைகிய தூணியின்
றிறங்க ளென்பர் திரள்கணைத் தாளையே. (கஅ)

2197 நறவ ளிக்கு நளினையைத் தோய்ந்துமெய்
யுறவ ளிப்பவ ளுண்மையைத் தேர்ந்துவாழ்
துறவ ளிப்பவர் சூழ்ச்சியி னுமையே
பறவ டிக்கிணை யென்று புகல்வரே. (ககூ)

வேறு.

2198 உம்பர்மால் வரைசுமந் தொசிந்த மின்கொடிக்
கம்பமே தாமுதிர் கதிசெய் வாயெனிற்
றம்பமே துளத்தெனத் தாழ்ந்து வீரிடும்
பைம்பொனூ புரத்தன பதுமத் தாள்களே. (உ0)

2199 நலம்புனை யிலதையின் னளிதெண் ணீரினிற்
குலம்புனை சினைகளிற் குலாய பன்மலர்
வலம்புனை புலந்தரு வரத்தின் மாசிலாப்
புலம்புனை கொடிபயந் தனைய பொற்பினள். (உக)

2200 கண்ணக னிலத்திறுட் கவின்பு ரப்பன
வெண்ணருங் கலங்களே யவையு மீங்கிவள்
வண்ணமெய் தாக்கவின் கைக்கொள் வாழ்வினற்
பெண்ணருங் கலமெனச் சிறந்த பெற்றியாள். (உஉ)

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணுநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ...	0	3	0
3.	*வளையாபதிச்செய்யுட்கள்			
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	நேமிநாதம் (உரையுடன்)	0	12	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ..	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
11.	*விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்			
12.	*பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	*திருக்கலம்பகம் (ஷை)			
23.	*விக்கிரமசோழனுலா			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	0	8	0
28.	*சந்திராலோகம்			
29.	*சோழவம்சசரித்திரச்சுருக்கம்			
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31.	பாண்டியம்	0	4	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
33.	வேளிர்வரலாறு	0	8	0
34.	அகப்பொருள்விளக்கம்	1	4	0
35.	*திருமந்திரநூறுபாட்டுக்குரை			
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	*பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்)	1	0	0
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0

41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	*கடைவள்ளலார்காலம்	0	6	0
50.	தமிழரும் ஆந்திரரும்	0	4	0
51.	மதங்கசூளாமணி	1	0	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர்	0	6	0
	ஷை ஆங்கிலத்தில்	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 34 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.